Koviloor Digital Library

இளவேனில்

கவிதைகள்

ஆசிரியர் :
'சோமு'

முன்னுரை :

ராவ் சாகிப்

S. வையாபுரிப் பிள்ளை அவர்கள்

தமிழ் ஆராய்ச்சித்துறைத்தலைவர்

சென்னை சர்வகலாசாலை

KVC0569

★

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை : : திருச்சி

Koviloor Digital Library

No. 26 MODERN TAMIL LYRICS

FIRST EDITION — MAY 1946

Price Rs. 2/-

ALL RIGHTS RESERVED WITH THE AUTHOR

STAR PUBLICATIONS

PALAKARAI :: TRICHINOPOLY

Printed at the Navalar Power Press, Trichy, for Star Publications.

P. I. C. Ty.—9

Koviloor Digital Library

உள்ளுறை

Koviloor Digital Library

Koviloor Digital Library

சமர்ப்பணம்

டி. கே. சிதம்பரநாத முதலியார்
அவர்களுக்கு

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

பார்த்திப வருஷம் ஆவணி மாதத்தில் ஒரு நாள் மாலை எங்கள் காரியாலத்துக்கு திருநெல்வேலி ஹிந்து கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் எனது அருமை நண்பருமான ஆ. முத்துசிவன் அவர்கள் வந்திருந்தார்கள். சிறிது நேரம் மறுமலர்ச்சிக் கவிதைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவர்கள் நண்பர் 'சோமு' அந்தரங்கமாக எழுதிவைத்துள்ள அருமையான கவிதைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தக் கவிதைகளை அவர்கள் வியந்து சொன்னவிதம் என் மனத்தில் ஒரு பெரிய ஆசையை உண்டாக்கியது, அக்கவிதைகளை உடனே படிக்கவேண்டுமென்று.

திரு. எம் பி. சோமசுந்தரம் அவர்கள் திருச்சி ரேடியோ நிலயத்தில் புரோகிராம் அஸிஸ்டன்ட் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். முன்பெல்லாம் 'சோமு' என்ற புனைபெயரில் அனேக அழகிய சிறுகதைகளைப் படித்திருக்கிறேன். ஆனால் நேரில் பழக்கமில்லை. அவர்களுடைய கவிதைகளையும் அப்பொழுது நான் படித்ததில்லை. எனவே நண்பர் 'சோமு' வைச் சந்திப்பதற்காகச் சென்றேன்.

இலக்கிய விஷயங்களைப்பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம். முடிவில் முத்துசிவன் அவர்கள் குறிப்பிட்ட கவிதைகளைப் படித்துக் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். "நீங்கள் ஒரு 'பப்ளிஷர்' ஆயிற்றே, என்றுதான் சற்றுத் தயங்குகிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். நான் அவரை விடுவதாக இல்லை.

இக்கவிதைகளைக் கேட்டதுமே, இவற்றை அவசியம் பிரசுரிக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் நண்பர் இவற்றைப் பிரசுரிக்கக்கூடாது என்பதற்கு ஏதேதோ நான் ஒப்புக்கொள்ள முடியாத சில காரணங்களைச் சொன்னார். அன்று திரும்பிவிட்டேன்,

Koviloor Digital Library

இந்நிலையில், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் திருக்குற்றாலம் 'லைப்ரேரி ஹாலி'ல் 'சோமு' அவர்களின் திருக்குற்றாலப்பாட்டை இலக்கிய சபையில் அரங்கேற்றிய செய்தியை தமிழ் அன்பர் ஒருவர் மூலம் கேள்விப்பட்டேன். மேலும் டி. கே. சி. அவர்கள் தமது கைப்படவே அந்தப் பாடலுக்குப் பிரதி செய்து சில இலக்கிய அன்பர்களுக்கு அனுப்பியதையும் பார்த்தேன். இப்பாடல்களைப்பற்றி டி. கே. சி. அவர்கள் எழுதியிருந்த வாக்கியங்களில் ஒரு ஆவேசமே இருந்தது. "தமிழ் மகளுக்கு ஒரு ஸ்ரீ தனம்" என்றெல்லாம் அப்பாடல்களைப் பாராட்டியிருந்தார்கள்.

நண்பரை மறுபடியும் சந்தித்து, பிரசுரத்தை வற்புறுத்தினேன்.

* * * *

'இளவேனில்' முதலிய இக்கவிதைகளில் முக்கியமாக நாம் காண்பது தமிழ்ப்பண்போடு இசைந்த கவிஞரின் தனிமேதை, பொருட் செறிவு, சொல்லின் இனிமையும் எளிமையும், சொல்லும் விதத்திலும் வடிவத்திலும் ஒரு நூதனத்தெளிவு. ராவ் சாகிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது முன்னுரையில் சொல்வது போல, "இப்பாடல்களில் எளிய சொற்களே உள்ளன; ஆனால் எத்தனையோ ஆற்றல் வாய்ந்தன. இவற்றை இசையோடு, பொருளுணர்ச்சியோடு நாம் பாடும்போது, நமது ஊனையும் உயிரையும் உருக்கும் தன்மையதாய் இவ்வாற்றல் சிறந்து நிகழ்கிறது."

"மதுக்கிண்ணம்" என்ற கவிதையைப் படிக்கும்பொழுது நமது மனமே ஒரு 'மோகன லாகிரி'யில் மூழ்கி விடுகிறது. பாஷையும் இசையும் குழைந்து கலந்த லாகிரிதான் அது.

"அந்தரம் பூமியென்று மனசைவிட்டு—ஊசல்
ஆட்டமாடிக் கவிதைகள் பாடியிருப்போம்"

என்பது அந்த லாகிரியின் எதிரொலிதான்.

Koviloor Digital Library

கால சக்கரத்தின் சுழற்சியை,

" காலனுழி சுழன்ருடுதம்மா—அது
காது துளைபடச் சாடுதம்மா "

என்று பாடும் கவிஞர், அழகுள்ள ஒரு மங்கைக்கு கால சக்கரத்தின் சுழற்சியினுல்,

" கண்ணிற் குழிவந்து வீழ்ந்த தம்மா—அவள்
கன்னக் குழியினைக் காணேமம்மா ! "

என்று சொல்லும்பொழுது உணர்ச்சியின் ஆழத்திலிருந்து கவிதை அப்படியே பொங்கி வருகிறது.

ஏகாந்தத்தில் நதிக்கரையிலே, இயற்கையோடு காவிய உள்ளம் சம்பந்தித்திருப்பது ஒரு பேரானந்த நிலை.

" பொருநைக் கரையிலே அன்ெருரு நாள்
பொன் மகள் ஒருத்தி நடந்து வந்தாள்
பொருநைக் கரையிலே அன்ெருரு நாள் "

என்று கவிஞர் தமது கற்பனை - அநுபவத்தை வெளியிடும் உத்தி (Technique) அதிசயிக்கத் தக்கது. இறுதி அடிகளில்,

" நிலவு முகிலின் நெஞ்சில் நுழைந்தது
நீரில் திரைகள் நெருங்கி அணைந்தன
உலவும் தென்றல் உலகை வளைந்தது
ஊரெலாம் மோன உவகை சமைந்தது "

என்று இயற்கையின் இரண்டறக்கலக்குந் தன்மையைச் சித்திரித்திருப்பது அற்புதமான கவிதை-ஓவியம்.

கையில் விளக்குடன் நடந்து சென்ற ஒரு கிரேக்க ஞானியிடம் இதன் அர்த்தம் என்ன என்று கேட்டதற்கு, உண்மை பேசும் மனிதனைத் தேடி அலைகிறேன் என்று பதில் சொன்னதாக ஒரு பழைய கதை. இக்கதைக்கு ஒரு புதிய உருவம் கொடுத்து, ' மனிதன் ஒருவன் " என்ற பாடலில்,

" என்றே கூறி ஞானியவன்
ஏந்தும் விளக்கை அணைத்து நின்ருன் "

Koviloor Digital Library

என்று முடித்திருப்பது கருத்தாழங்கொண்ட ஒரு அருமையான உண்மை-விளக்கம்.

இதுபோலவே 'எதிரொலியாள்' என்ற பாடலில்,

"இதன்வழி யாதோ இஃதும்
என்னவோ ஏதோ என்றாள்"

என்ற முடிப்பு மிகமிக ரசமாயிருக்கிறது.

'மரணம் ஒரு கனவு' என்ற பாடலைப் படித்து அனுபவித்த எனது இலக்கிய நண்பர் ஒருவர் 'மரணம் இவ்வளவு சுகமாயிருக்குமானால், நான் தினசரி இறப்பதற்குத் தயாராயிருக்கிறேன்' என்றார்.

"என்னே புதுமை ஏதே ஒருமை
என்னே இதுவோ மரண மம்மா
என்னே இன்பம் ஏதே மகிமை
என்னே இதுவோ மாய்வம்மா"

தீபாவளிக் கும்மி, கைலயங்கிரி முதலிய பாடல்களில் வையாபுரிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடும் 'பௌராணிக நிகழ்ச்சிகள்' அருமையாக வர்ணிக்கப்படுகின்றன. கலைக்கோவில் முதலிய பாடல்களில் நமது இலக்ஷியங்கள் பேசப்படுகின்றன. முதன் முதல், காதல் நாயகி, பொற்சிவிகை முதலியன சிறு சிறு கவிதைப் பொறிகள். இவற்றிலெல்லாம் ஆங்கில ஆசிரியர்கள் போற்றும் LYRIC CRY கனன்று ஒலிப்பதைக் கேட்கிறோம். 'எழில்' என்ற கவிதை தமிழ் நாட்டின் முதலாவது ரேடியோ கவியரங்கத்தில் அரங்கேறிற்று:

"காட்சியிலே இல்லையது,
கண்களிலே உள்ளதடா"

பாடல் மாசற்ற வடிவங்கொண்டு சிறந்த கவிதையாக விளங்குகிறது. இப்பாடலும் 2. 4, 5. 8, 13, 22, 28 ஆகிய எண் கொண்ட பாடல்களும் திருச்சி ரேடியோ நிலயத்தில் ஒலிபரப்பானவை. ஆல்இந்தியா ரேடியோவின் அன்பான அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகின்றன.

'பொழுது சாயுது' என்ற பாடலில் வரும் ஓடப்பாட்டுக்களும் 'வெண்ணிலா'வில் வரும் கிராமியப் பாடல்களும், இத

Koviloor Digital Library

யத்தின் உணர்ச்சியை அருமையான வடிவத்தில் அவர்கள் பேசும் பாஷையிலேயே தத்ரூபமாக வெளியிடுகின்றன.

'பிரிவு' என்ற பாடல் இத்தொகுதியிலேயே, மிக அற்புத மான பாடல்களில் ஒன்று என்று நான் கருதுகிறேன். பக்கம் பக்கமாக எழுதக்கூடிய ஒரு சோக நாடகத்தை, நான்கே பாடல் களில் உணர்ச்சி ததும்ப, ஒரு சிறந்த சிறுகதைச் சித்திரமாக நமது கவிஞர் பாடியிருக்கிறார்.

"சந்திரன் காயும்வேளை
சந்தித்த காலமெல்லாம்
(நினைவிருக்கவேணும்)"

என்று உருக்கத்துடன் சொல்லும் காதலன்,

"பரிதியின் மேலும் இந்தப்
பால்நிலா மேலுந்தானே
உறுதிகள் கோடி செய்தோம்
உன்மத்த ராயிருந்தோம்"

என்று கூறும்பொழுது, உணர்ச்சி வேகத்துடன் விம்மு கிறது. 'உன்மத்தர்' என்ற வார்த்தையில் விழுகிற வல்லோசை, நம்முடைய மனத்தை ஊடுருவிப் பாய்கிறது.

இத்தொகுதியின் முடிவில் உள்ள 'கவிதைப் பெண்' ஒரு இசை குலுங்கும் காட்சி. கவிதையின் இலக்கணமே அதில் உள்ளது என்று சொன்னால் மிகப்பொருந்தும்.

"கையில் வளைகள் ஆடிடுமே—அவள்
காலிற் சிலம்பு பாடிடுமே
மெய்யில் மின்னல் வீசிடுமே—அந்த
மேனி கவிதை பேசிடுமே"

இப்படிப்பட்ட பெண் யார்?

"கவிதை எனும் ஓர் பெண் தெய்வம்—அவள்
கவிஞர்க்கெல்லாம் குல தெய்வம்
புவியை இயக்கும் புகழ்த் தெய்வம—அவள்
புலவர்க் கெல்லாம் குல தெய்வம்"

ஸ்டார் பிரசுரம்
திருச்சி,
விய, ஆனி, 3

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.
பதிப்பாசிரியர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

முன்னுரை

[ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்.]
Reader in Tamil, University of Madras.

இக்கவிதை நூலின் ஆசிரியர் திரு எம். பி. சோமசுந்தரம் ஓர் இளங் கவிஞர். நல்ல தமிழுணர்ச்சியும், கலையுணர்ச்சியும், கவித்துவமும் இவரிடத்தே யுள்ளமை மகிழ்ந்து பாராட்டற் குரியது. வாழ்க்கை இயற்கை, மகளிர், காதல், தமிழ்ப்பற்று, பௌராணிக நிகழ்ச்சி முதலிய பொருள்கள் பற்றி இந்நூலின் கண் நாற்பத்தொரு கவிதைகள் உள்ளன. ஓர் உதாரணத்தால் இவரது கவித்துவ-ஆற்றலை உணரலாம்.

சைன சமயத்தைச் சார்ந்த புலவர்கள் பலர் அறன் வலியுறுத்தல் வேண்டி,

புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை – இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லால் [நாலடியார்]

என்பதுபோன்ற கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இவ் வுறுதியுரை அறிவு வாயிலாகப் பிறந்ததேயன்றி, உணர்ச்சி (Emotion) வாயிலாகப் பிறந்ததன்று. உலகப் பற்றைத் துறந்த துறவியிடமிருந்து அனுதாபவுணர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. வற்றியுலர்ந்துபோன மரத்தில் ஈரப்பசை இருக்க முடியுமா? நிலையாமையைச் சற்றுக் குதூகலத்தோடே "நின்றான் இருந்தான் கிடந்தான், தன் கேளலறச் சென்றான்"

Koviloor Digital Library

என்று கூறுவதாகத் தோன்றுகிறது. மனத்தில் எழ வேண்டும் சோக வுணர்ச்சியை இவ் அறிவுரை இல்லாமற் செய்துவிடுகிறது. எனவே, அறிவுரையை நீக்கி நிலையாமையை மட்டும் உணர்த்துவதே கவிதைக்குத் தக்கதாகும். நமது இளங் கவிஞர் இப் பொருளைத் தம் உள்ளத்தின் பள்ளத்தினின் றெழுந்த சோகவுணர்ச்சி ததும்பப் புலப்படுத்துகிறார்.

எத்தனை மலர்கள் இத்தரை மீதினில்
நித்த மலர்ந்திடுமோ - பின்
எத்தனை மலர்கள் இத்தரைமீதினில்
நித்த முலர்ந்திடுமோ - நித்தம்
நித்த முலர்ந்திடுமோ.

இயற்கை - விதியின் வலிமையும் பெருமையும், அவ் விதியின் ஆட்சிக்கு உட்பட்டு அலைப்புண்டு உழலும் பொருள்களின் நொய்ம்மையும் சிறுமையும் மிகவும் நன்றாக ஒலி - வேற்றுமை மூலம் சித்திரிக்கப்படுகின்றன. எத்தனை, இத்தரை, மீதினில், நித்தம்: இச் சொற்களில அடுக்கிவரும் வல்லின வொலிகள் வலிமை பெருமைகளை யுணரச் செய்கின்றன. மலர்கள், மலர்ந் திடுமோ, உலர்ந்திடுமோ: என்பனவற்றில் அடுக்கி வரும் இடையின வொலிகள் நொய்ம்மையும் சிறுமையும் புலப்படச் செய்கின்றன. இயற்கை விதி ஒய்வொழிவில்லாமல் எக்காலத்தும் மீட்டும் மீட்டும் தன் தொழிலைச் செய்து வருகிறது; இது பாடலின் அடிகள் மீட்டும் மீட்டும் ஆவர்த்தித்து வருதலால் உணரக் கிடக்கிறது. “எத்தனை” என்ற எடுப்பே நம்மைச் சோகத்தில் ஆழ்த்தி விடுகிறது. இப்பரந்த

Koviloor Digital Library

உலகில் இயற்கை விதிக்கு ஒரு விலக்கேனும் காணப் படவில்லை; இவ் இரக்கவுணர்ச்சி "இத்தரை மீதினில்" என்ற தொடரில் குமுறிப் பாய்கிறது.

மலர் முதலிய இயற்கைப் பொருளைப் போன்ற தன்று மக்களினம். இது அறிவாற்றலால் சிறந்து விளங்குவது; இயற்கை விதியை எதிர்த்துப் போராட வல்லது; இப் போராட்டத்தில் அனுபவம் பெற்றது; வெற்றியும் பெற்றுள்ளது. ஆனல் வெற்றியிலே ஒரு விந்தை. ஓர் இயற்கை விதியின்மீது வெற்றிகொள் வது பிறிதோர் இயற்கை விதியினுல்தான். ஆகவே, இம் மக்களினமும் அதன் உள்ளத்தில் ஆட்சிபுரிந்து வரும் காதலும் இயற்கை விதிக்கு உட்பட்டனவே என்பது அடுத்துவரும் பாடலில் உணர்த்தப்படுகிறது.

எத்தனை காதல்கள் இத்தரை மீதினில்
நித்தம் நிகழ்ந்திடுமோ! - அங்கு
எத்தனை காதல்கள் இத்தரை மீதினில்
நித்த மடிந்திடுமோ! - நித்தம்
நித்த மடிந்திடுமோ!

இப்பாடலிலும் முற்கூறிய சோகக் குரல் நம்முடைய செவி வழியே புகுந்து உள்ளத்தைத் தீய்த்து விடு கிறது.

'காதலாலேயே உலகம் நிலைத்து நிற்கிறது; இக் காதலே உண்மை; இக்காதலே நித்தியம்' எனப் பல படப் பேசுவார்கள். இக் காதலோ அற்பநேரம் நிகழ்வது. இந் நிகழ்ச்சியுங்கூடக் கனவாகவே முடி கிறது; கனவில் நிகழும் ஒரு நாடகமே இக்காதல். கனவு நிலையற்றதாமாறுபோல, தெய்விகக் காதல்

Koviloor Digital Library

எனப் புகழப்படும் இதுவும் நிலையற்றதே. இவ் அற்பக் காதற் கனவில் இத்தனை இன்பமா! இதன் நிமித்தம் இத்தனை துன்பமா!

எத்தனை கனவுகள்! எத்தனை காதல்கள்!
எத்தனை எத்தனையோ! - நிதம்
எத்தனை இன்பம்! எத்தனை துன்பம்!
எத்தனை எத்தனையோ! - நிதநிதம்
எத்தனை எத்தனையோ!

முன் குறித்த பாடல்களிற் போலன்றி, இப்பாடலில் முதலடி மூன்றுமடி யொவ்வொன்றிலும் இரண்டு சிறு வாக்கியங்கள் அமைந்து ஓசையும் இரண்டு தாள அறுதிகள் கொண்டுள்ளது. இது சோகவுணர்ச்சியைப் பன்மடங்கு மிகுவிக்கிறது. "நிதநிதம்" என்பது இன்பமும் துன்பமும் மாறிமாறி, அடுத்தடுத்துத் தொடர்ந்து வருவதனை மிக்க வேகத்துடன் உணர்த்துகிறது. "எத்தனையோ" என்ற இறுதிச் சொல்லில் மக்களினத்தவரின் அழுகுரல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

இப் பாடல்களில் எளிய சொற்களே உள்ளன. ஆனால் எத்தனையோ ஆற்றல் வாய்ந்தன. இவற்றை இசையோடு, பொருளுணர்ச்சியோடு, நாம் பாடும்போது ஊனையும் உயிரையும் உருக்கும் தன்மையதாய் இவ் ஆற்றல் சிறந்து நிகழ்கின்றது. சோகத்தின் உருவென்றே இப்பாடல்களின் அமைப்பைக் கூறுதல் மிகையாகாது.

திரு சோமசுந்தரத்தின் கவித்துவ ஆற்றலை இக் கவிதை நன்கு புலப்படுத்துகிறது. கால அடைவில்

Koviloor Digital Library

இவர் தமிழ் நாட்டில் ஒரு சிறந்த கவிஞராக விளங்கு வாரென்பதற்கு அறிகுறி இக் கவிதையிலே உள்ளது.

நமது இளங் கவிஞரைத் தமிழுலகம் நன்கறியும். சில ஆண்டுகட்கு முன்னர் சிறு கதைப் போட்டியில் பாரதி தங்கப் பதக்கம பரிசு பெற்றுள்ளனர். சில சிறந்த பாடல்களைப் பாடிப் பத்திரிகைகளில் வெளியிட்டு, தமது அரிய கவித் திறனைப் புலப்படுத்தியிருக்கின்றனர். திருச்சி வானொலி நிலயத்தில், தமது உத்தியோக முறையில், சீரிய தொண்டுகள் பல இன்றும் ஆற்றி வருகின்றனர்.

கவிஞர் "சோமு"வுக்கு எனது ஆசி.

சென்னை சர்வகலாசாலை
12—3—46

எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

நன்றியுரை

முதன் முதல் என்னை எழுதும்படி தூண்டி கடிதங்கள் மூலமும் நேரிலும் பல முறைகளில் உற்சாகப்படுத்தியவர் திருவாளர் ரா. கிருஷ்ணமூர்த்தி யவர்கள். சுகத்திலும் துக்கத்திலும் என்னுடைய இலக்கிய முயற்சிகளுக்கெல்லாம் உற்ற துணையாக இருந்தவர் எனது உயிர் நண்பர் ஜெ. ராம்லிங் அவர்கள். இவ்விருவருடைய அன்பையும் நான் என்றும் மறக்க முடியாது.

எனது கவிதை முயற்சியில் என்னை இடைவிடாது ஊக்கப்படுத்தியவர்கள் ஆங்கிலப் பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் அவர்களும், தமிழ்ப் பெரியார் பண்டித ஆண்டியப்ப பிள்ளையவர்களும். இளவேனில் முதல்ய இக்கவிதைகளை உடனிருந்து அனுபவித்து என்னை மேலும் மேலும் எழுதத் தூண்டியவர்கள் இருவர்; இப்பொழுது டெல்லி ஆல் இந்தியா ரேடியோ மத்திய செய்தி ஸ்தாபனத்தின் உதவி நிர்வாகஸ்தராயிருக்கும் எனது நண்பர் திரு கு. ப. ரங்காச்சாரி அவர்களும், திருவாவடுதுறை ஆதீன வித்வான் திரு வி. சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்களும். இந்நால்வருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்,

முன்னுரை எழுதி யுதவிய சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை யவர்களுக்கு எனது வந்தனம் உரியது.

இப்புத்தகம் வெளிவருவதில் நண்பர் ஆ. முத்துசிவம் அவர்களும் நண்பர் வி. ஆர். எம். செட்டியார் அவர்களும் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார்கள்; இவர்களுக்கு எனது நன்றி.

திருச்சி,
17—6—46.

சோமு

Koviloor Digital Library


Koviloor Digital Library

இளவேனில்

வானம் சிரித்தது, வையம் சிலிர்த்தது,
வந்த(து) இளவேனில்; வந்த(து) இளவேனில்;
கானம் ஒலித்தது, கான்மலர் நகைத்தது,
காயு(து) இளவேனில்; காயு(து) இளவேனில்!

பொதிகை உரைத்தது புத்துணர் வென்று,
புவியெலாம் அங்ஙனே புத்துணர் வுற்றது;
பொதிகை சிரித்தது, பொருநை சிரித்தனள்,
பூங்கொடி யாவும் புன்னகை செய்தன!

மரங்கள் தழைத்தன, மட்டை துளிர்த்தன,
மாருதம் வீசிட மாங்கொழுந் தவிழ்ந்தன;
சரங்கள் நகைத்தன; அசரம் நகைத்தது;
சகமெலாம் இன்னொலி சார்ந்தெழுந் ததுவே!



2

Koviloor Digital Library



மதுக்கிண்ணம்

[வாழ்வின் இன்பத்தை மது என்று உருவகித்துப் பாடுவதும் இதயத்தின் உணர்ச்சியழகை மதுவின் சுவை என்று அலங்காரப் படுத்திச் சொல்வதும் ஒரு மரபு. அதையொட்டி எழுதப்பட்ட சித்திரம்.]

அன்றொருநாள் பழஞ்சந்தை
அருகினிலே சென்றிருந்தேன் ;
சென்றறியாக் கடைகளெலாம்
சென்றுநின்றே ஆராய்ந்தேன் ;

அங்கருகோர் சிறுகடையில்
அமர்ந்திருந்தான் ஒரு கிழவன் ;
அங்கமெலாம் தளர்ந்துருகி
அசைந்தாடும் உடலுடையான் ;

Koviloor Digital Library

ஆகாத பழம்பொருள்கள்
அடுக்கியே வைத்திருந்தான் ;
சாகாத இலக்கியத்தின்
சாவிற்கா யுழைக்கின்ற

கறையான் அரித்தரித்துக்
கரைந்துவிட்ட பழஞ்சுவடி ;
உரையால் முடியாத
ஒப்பற்ற சித்திரங்கள் ;

தம்மை இசைத்திட்ட
தளிர்க்கரங்கள் மறைந்தமையால்
தம்மின் இசையிழந்து
தவறிவிட்ட வீணைகள் ;

சுவையுடைய வாத்தியங்கள் ;
சுதிகூட்டும் தம்பூர்கள் ;
எவையெவையோ பழைமையன
எத்தனையோ விற்றன்காண் !

இத்தனைபல் பொருள்களிலும்
என்னைமிக ஈர்த்ததொன்று;
அத்தனைபேர்க் கூட்டத்தில்
ஆரும்விரும் பாததொன்று;

விந்தை யழகுடைத்தாய்,
விள்ளரிய வாய்ப்புடைத்தாய்,
சிந்தை கவருவதாய்ச்
சிறியதொரு மதுக்கிண்ணம் !

Koviloor Digital Library

கற்பனையின் களஞ்சியமாம்
கலையமர்ந்த பேடகமாம் ;
விற்பனைசெய் பொருள்களிலே
விலகியொரு கோடியிலே

சின்னமதுக் கிண்ணமது
சிறியநகை செய்ததுகாண் ;
"என்னவிலை" என்றேன் ;
"எடுத்துக்கொள் சாமீ

போதாச்சு வீட்டிற்குப்
போகின்றேன் ஆகையினல்
ஏதாச்சும் கொடுத்தி" டென்ருன்
இங்கிதமாய் அக்கிழவன்.

விந்தையொடு கிண்ணத்தை
வீட்டிற்குக் கொண்டுவந்தேன்;
சுந்தரக் கிண்ணமது
சொன்னபல செய்தியுண்டு ;

வண்ணமதுக் கிண்ணமது
வர்ணித்த கதையுண்டு ;
விண்ணவர்கள் மதுமயக்கில்
விட்டெறிந்த பொற்கிண்ணம் !

அதுநெய்த கனவுகளும்
அஃதுரைத்த கவிதைகளும்
மதுவைப் பருகையிலே
மாயமாய் ஒலித்தனவே.

Koviloor Digital Library

[கிண்ணம் பாடுகிறது]

என்னை ஒருநாள் ஒருகலைஞன் - பொன்னை
இளக்கி உருவம் வார்த்திட்டான்
பின்னை ஒருநாள் ஒருகலைஞன் - எழில்
பிசைந்து வர்ணம் பூசிட்டான்

பின்போர் நாளில் இரவினிலே - எனைப்
பேதை ஒருத்தி விலைகொண்டாள்
அன்றோ திருநாள் அமர்க்களமாம் - அதில்
அவர்க்கு நல்ல மதுகொடுத்தேன்

ஆயிழை யும்அவள் காதலனும் - அன்பில்
அளந்த கதைகள் ஆயிரமாம்
ஆயிரம் ஆயிரம் முத்தங்கள் - பல
ஆயிரம் ஆயிரம் காதல்கள் !!

நேயமும் ஓர்நாள் மறைந்திடவே - அந்த
நேயரும் ஓர்நாள் பிரிந்தனர்காண்
மாயமாம் உலகத் தறுதியிது - மக்கள்
மாபெரும் காதலின் உறுதியிது !

மானுடர் முதியர் ஆகிட லாம் - இந்த
மானிலம் முதுமை அடைந்திடலாம்
நானில மீதில் மதுவுளதால்— நிதம்
நவநவக் கவர்ச்சிகள் உண்டெனக்கே.

Koviloor Digital Library

[பிரபஞ்சம் என்ற மதுஅங்காடியில் பலகுரல்கள் கேட்கின்றன.
கிண்ணத்தை நோக்கி ஞானி சொல்கிறான்]

எத்தனை பேரிதை வழங்கினரோ - இதில்
எத்தனை பேர்மது அருந்தினரோ
எத்தனை கனவுகள் ஆய்ந்தனரோ - இதில்
எத்தனை காதலர் மாய்ந்தனரோ

[கவிஞன் கூறுகிறான்]

வண்ண மதுஇது முதியதடா - இதை
வார்க்கும் வனிதையோ கன்னியடா
கிண்ணம் பழைய கிண்ணமடா - இது
கிளறும் கனவுகள் புதுமையடா.

[வேந்தன் சொல்கிறான்]

மதுவின் கிண்ணம் கொண்டுவந்தாள் - எழில்
மங்கை யவளதில் மதுவார்த்தாள்
மதுவினை ஏந்திய கரத்தாலே - இள
மங்கை என்னை ஒருச்சாய்த்தாள்

பின்னர் அந்தக் கிண்ணத்திலே - அரும்
பெண்ணவள் முத்தம் ஒன்றுதந்தாள்
வன்ன முத்தம் இட்டதுமே - அவள்
மதுவினை என்னிடம் நல்கிட்டாள்.

Koviloor Digital Library

விரும்பி மதுவைச் சுவைத்ததும் - ஓ! ஓ!
வியன்பெரும் புத்துணர் வெய்திட்டேன்
கரும்பின் ருசியும் அல்லவது - நறும்
கற்கண் டின்ருசி அல்லவது

கிண்ண மதுவின் சுவைதானோ - அன்றிக்
கின்னர மங்கை யவள் தந்த
வண்ண முத்தச் சுவைதானோ - இங்ஙன்
வந்தெனை மயக்கிய தறியேன் ! ஓ !

[பாரசிக யாத்ரிகன் பேசுகிறான்]

இறந்த காலத் துயரொழிய
எதிர்கா லத்தின் நினைவழிய
மறந்து மதுவில் ஆழ்ந்திடவே
மதுவின் கிண்ணம் ஏந்திடம்மா !

வருவாய் பெண்ணே என்னருகே
வந்து மதுவை வார்த்திடுவாய்
தருவாய் சுவைசேர் அதரத்தால்
தளிர்க்கு முத்தத் தண்மையினை !

[போகி உரைக்கிறான்]

மனமே மதுவில் முழுகிடுவாய்
மதுவால் துயரைக் கழுவிடுவாய்
மனமே மதுவைத் துதித்திடுவாய்
மதுவில் விழுந்து குதித்திடுவாய்

Koviloor Digital Library

[அங்காடியின் கருவூலத்திலிருந்து
பலகுரல்கள் சேர்ந்து ஒலிக்கின்றன]

முந்திரிப் பழத்திலே சாறுபிழிந் து - மண்ணில்
மூடிப் புதைத்துப்பல் லாண்டுகள்வைத் தே
அந்தயிகு வாசனேயோ டதையெடுத் து - வெகு
ஆனந்த மாய்ப்பருகி லயித்திருப் போம்

முந்திரிச் சாற்றுக்குள்ளே வெறியெழுந்து - சுக
மோகன லாகிரியில் மூழ்கிவிழுந் து
அந்தரம் பூமியென்று மனசைவிட் டு - ஊசல்
ஆட்டமாடிக் கவிதைகள் பாடியிருப் போம்

[ஒரு கன்னியின் குரல் கேட்கிறது]

கனவுகள் நெய்வது மதுவலவோ - நல்ல
கதைகள் சொல்வது மதுவலவோ
நனவில் உறக்கம் நல்குவதும் - காதல்
நலங்கள் தருவதும் மதுவலவோ

[இதைத் தொடர்ந்து உரத்த குரலில் அங்காடிக்காரன் பாடுகிறுன்]

சுந்தர மதுவென்று சொல்லிடடா - அதன்
சோதி மயக்கிலே சொக்கிடடா
அந்தர வெளியினைத் தாண்டிடடா - அந்த
ஆனந்தப் பெருக்கிலே மாண்டிடடா

Koviloor Digital Library

[அங்காடிக் கூட்டத்திலே மதுக்கன்னி
கிண்ணம்கிண்ணமாக மதுவார்த்து வருகிருள்]

[போகி]

மதுவினை வார்த்திடும் பெண்ணே - என்னை
மதுவென மயக்குதுன் கண்ணே
மதுவினை வழங்கிடும் போதே - உன்றன்
மனத்தினை வழங்கிடு வாயோ?

[காதலன்]

துய்ய விண்ணவர் அமுதோர்கரம் - நீ
சுவைத்துத் தந்த மதுவோர்கரம்
ஐய உனக்கெது வேண்டுமெனில் - நின்
அதரம் சுவைத்த மதுகேட்பேன்

[கவிஞன்]

பூவின் கதம்பம் ஒன்றுதந்தேன் - அதில்
பூப்போல் நீயொரு முத்தமிட்டாய்
பூவினை மீண்டும் நுகர்ந்தாலோ - அடீ
பூவைநின் மணமதில் வீசுதடி - அடீ
பூவைநின் புகழதில் பேசுதடி.

Koviloor Digital Library

[நான்]

தென்னைமரச் சோலையிலே
தேன்சொரியும் வெண்ணிலவில்
சின்னதோர் குடிசையிலே
சிற்றோடை தன்மருங்கில்
கன்னி அருகிருந்து
கற்கண்டு மதுவார்த்தாள்
கன்னி அழகொளிரும்
கையாலே மதுவார்த்தாள்.

வேறு

கிண்ணம்கைக் கொண்டதுண்டு,
கிள்ளைமது வார்த்ததுண்டு,
பின்னை நடந்ததொன்றும்
பேச வருகுதில்லை ;
பேச வருகுதில்லை
பேச்சுக் கடங்குதில்லை !

Koviloor Digital Library

திருக்குற்றாலம்

வானை அளந்துநின்ற மலைகளுண் டு—நல்ல
வாசமொடு தென்றல்உலா வருவதுண் டு
தேனைச் சொரிந்திடும்பூஞ் சோலைகளுண் டு-வாகாய்த்
தெள்ளியநீர் துள்ளிவரும் ஓடைகளுண் டு

தெள்ளத் தெளிந்தவண்ணச் செக்கருமுண் டு-வானில்
தேடரிய சித்திரங்கள் தீட்டலுமுண் டு
உள்ளம் தளிர்க்கவரும் முகில்களுண் டு—பன்னீர்
தெள்ளித் தெளித்துவரும் பாங்குமங்குண் டு

நின்று குளித்திடவெள் அருவியுண் டு—வந்தோர்
நெஞ்சங் குளிருமட்டும் நிற்பதுமுண் டு
சென்று குளிப்பதற்குச் செண்பகாட வி—உயர்
தேனருவி ஐந்தருவி தொலைவிலுண் டு

கோலக் குரங்கினங்கள் கோடியங்குண் டு—தாயின்
கும்பியிலே தொங்கிவரும் குட்டிகளுண் டு
ஆலம் விழுதினூசல் ஆடுவதுண் டு—மந்தி
அத்தனையும் அந்தரடித் தோடுவதுண் டு

கோடுமதி சூடுபிரான் கோவிலுமுண் டு—கலைக்
கோலமிகு சிற்பஎழில் தானுமங்குண் டு
ஆடுமயில் பாடுகுயில் அனந்தமுண் டு—மன
அமைதியும் ஆனந்தமும் விளைவதுண் டு

Koviloor Digital Library

பன்னும் இலக்கியங்கள் பயில்வதுண் டு—பல
பண்டிதரும் அங்குவந்து கூடுவதுண் டு
கன்னித் தமிழுமுண்டு கம்பனுமுண் டே—இன்பக்
களிமிகு வாழ்விதுமோர் காவியமன் றோ!



Koviloor Digital Library


முகிற் சிற்பம்

காற்றெனும் சிற்பி கார்முகில் செதுக்கிக்
கவின்மிகு சிற்பக் காட்சிகள் புனைவன்
கோதிலாச் சிற்பக் கோவிலொன் றுக்கக்
குறித்தவன் குறித்தவா றமைத்திட இயலான்
சிற்பம் ஆக்குவன் சிதைவு செய்குவன்
ஆக்குவன் மீண்டும் நோக்குவன் அழிப்பனால்;

வானம் வனையும் வர்ணச் சிற்பம்
காணக் காணக் குமையுமென் னுள்ளம்.
முகில்கள் ஒருகணம் மோகன உருக்கொளும்
முற்றும் சிதைந்து முடியும் மறுகணம்;
மனிதக் குழுவின் மாய்விலாச் சலனம்
மகிதலப் படைப்பின் மாபெரும் சுழற்சி
அனைத்தும் போன்றதிவ் வதிசயக் காட்சி;

Koviloor Digital Library

வானம் எனும்பெரு நாடக சாலையில்
ஒவ்வோர் அந்தியும் ஓரருங் கூத்து
முகிலெனும் சிற்ப நடிகர் கூடி
முனைந்தங் காடுவர் முறைமுறை வந்தே.



Koviloor Digital Library

ஓய்விலாக்காலம்

காலன் ஆழிசுழன் றுடுதம்மா—அது
காது துளைபடச் சாடுதம்மா
ஓலமிட் டேகாதில் ஊதுதம்மா—தனக்
கோய்வுதான் இல்லையென் றோதுதம்மா

நேற்றந்தி நேரத்திற் சென்றிருந் தேனொரு
நேர்த்தி மிகுமலர்க் காவனத்தே
காற்றினி லேவாசம் வீசிச்சி லிர்த்தது
காதல் நகைசெயக் கண்டுவந்தேன்
வேற்றுநி னைப்பின்றி வையந்த ருமிந்த
விந்தை மகிழ்வினைச் சிந்தைசெய்தே
தோற்றுமக் கான்வழி காலைசென் றேனந்தத்
தூய மலர்வெம்பித் தியக்கண்டேன்

காலன் ஆழிசுழன் றுடுதம்மா

Koviloor Digital Library

விண்ணின் மதிகொய்து வதனமென் றுளவள்
விண்மீன் இரண்டினைக் கண்களென் றுள் அந்த
விண்ணிலே வீழுமவ் வில்லெடுத் தாளதை
விழியினிற் கூட்டியே புருவமென் றுள்நீல
விண்ணைக் கிழித்தனள் மேனியிற் சுற்றினள்
மின்னலைக் கொண்டவள் புன்னகை செய்தாள்;
பெண்மகள் பெண்ணலப் பேற்றினு லேயிந்தப்
பேதை யினைமிகப் பித்துறச் செய்தாள்

காலன் ஆழிசுமுன் றுடுதம்மா

விண்மதி சாய்ந்தது விண்ணினுள்ளே—அந்த
விண்மீன் இரண்டுமே வீழ்ந்தன காண்
விண்ணிலே வில்லு மறைந்ததம்மா—அந்த
மின்னலையு மெங்கோ மாண்டதம்மா
கண்ணிற் குழிவந்து வீழ்ந்ததம் மா—அவள்
கன்னக் குழியினைக் காணோமம் மா
பெண்ணிற் றுளேரதிப் பெண்ணவள்தான்–இன்று
பேயென வேமாறிப் போனுளம் மா

காலன் ஆழிசுமுன் றுடுதம்மா

Koviloor Digital Library

பெண்ணோடு கூடிநான் வாழ்ந்ததுண்டு - நல்ல
பெண்டிர் களியிலே ஆழ்ந்ததுண்டு
விண்ணோடு மண்ணை அளந்ததுண்டு—பல
விந்தைக் கனவுகள் கண்டதுண்டு
பண்ணோடு நெஞ்சினைப் பின்னிவிட்டே—மது
பானத்திலே மூழ்கிப் போனதுண்டு
கண்ணோடு கண்டதும் மெய்யெனக் கொண்டதும்
கட்டுக் கதையாகி விட்டதம்மா

காலன் ஆழிசுழன் றாடுதம்மா—காணும்
காட்சி யெலாம்சுழன் றோடுதம்மா
ஓலமிட் டேயாழி சாடுதம்மா—உயிர்
ஓய்வற்ற தென்றது பாடுதம்மா.

Koviloor Digital Library

வர்ணக்கனவு

மாலைப் பொழுதினிலே மதிமயக்கும் தென்றலிலே
வாலைக் குயிலொன்று வசந்தப்பண் பேசையிலே

சோலைக்குள் தெளிந்ததொரு சுந்தர வாவியினுள்
காலைத் துழாவியே கரைமே லிருந்தேனல்.

விந்தை யழகுடைய விதவிதமாம் வர்ணங்கள்
சிந்தை கவர்ந்தேகிச் செவ்வானிற் சுழலையிலே

தொலைவினில் என்னெதிரே தூயதொரு ஒளிவட்டம்
அலையலையா யுருவாகி அசைந்தோடிச் சென்றதுகாண்

சோதி மறையவுமே சொக்குடைய காட்சிகண்டேன்
ஆதி அயனார்தம் ஆக்குமிடம் போலுமது!

சின்னத் துருசுகளும் சிங்காரக் கோப்பைகளும்
வன்னக் களிமண்ணும் வட்டவிசைச் சக்கரமும்

படைத்து வரும்பொழுது பாதியிலே நின்றுவிட்ட
படைப்புப் பொருள்களுமே பலகோடி கண்டிட்டேன்.

சக்கரம் சுழலுங்காற் சட்டென்று நின்றதென்னே
அக்கர ர குறைந்ததுவோ அயனாரும் களைத்தாரோ

Koviloor Digital Library

என்றுபல சிந்தித்த ஏழையின் கண்முன்னே
நின்று தவஞ்செய்யும் நிமலனார் திருவுருவம்

ஈரிரண்டு சிரங்களுடன் ஈரிரண்டு கைகளுடன்
கூரியதன் எழுத்தாணி கொளுவிநின்ற செவியுடனே

யோகத்து நிலைதனிலே யோசனையின் கோடியிலே
ஆகத்தில் அசையாது அரியதவம் செயக்கண்டேன்.

வெகுநேரம் சென்றதடா விழிதிறக்க வில்லையடா
வெகுநேரம் வெகுநேரம் விந்தைமிகு வெகுநேரம்!

இறுதியில் ஒருமட்டும் எப்படியோ கண்விழித்தான்
உறுதி வகுத்தவன்போல் உவகையால் முறுவலித்தான்!

"அன்று தொடங்கியபின் இன்றுவரை ஈதறியோம்
நின்று தவமிருக்க நேர்ந்த வகைஏதோ?

ஆயிரம் ஆண்டுகளில் அவதரிக்கும் மாகவியை
மாயிரும் ஞாலத்தார் மாண்புகொளச் செய்வோனே

அருவத்தில் உருவங்கள் அற்புதமாய்ப் படைப்போனே
உருவத்தில் உருவாக்க ஓங்குதவம் செய்தனையோ?

கவியைப் படைத்திட நீ கைவலிமை தேடினையோ,
புவியை இயக்கிட்ட புண்ணியா கூறெ' ன்றேன்.

'வண்ணத்துப் பூச்சியொன்றின் வர்ணச் சிறகாக்க
எண்ணங்கள் தேடுகிறேன் இதுகாறும்'
என்றுரைத்தான்.

Koviloor Digital Library

எத்தனை எத்தனையோ

எத்தனை மலர்கள் இத்தரை மீதினில்
நித்த மலர்ந்திடுமோ - பின்
எத்தனை மலர்கள் இத்தரை மீதினில்
நித்த முலர்ந்திடுமோ - நித்தம்
நித்த முலர்ந்திடுமோ

எத்தனை காதல்கள் இத்தரை மீதினில்
நித்தம் நிகழ்ந்திடுமோ - அங்
கெத்தனை காதல்கள் இத்தரை மீதினில்
நித்த மடிந்திடுமோ - நித்தம்
நித்த மடிந்திடுமோ

Koviloor Digital Library

எத்தனை பூவையர் இத்தரை மீதினில்
நித்தம் சிரிப்பார்களோ - பின்
எத்தனை பூவையர் இத்தரை மீதினில்
நித்த மரிப்பார்களோ - நித்தம்
நித்த மரிப்பார்களோ

எத்தனை கனவுகள் எத்தனை காதல்கள்
எத்தனை எத்தனையோ - நிதம்
எத்தனை இன்பம் எத்தனை துன்பம்
எத்தனை எத்தனையோ - நிதநிதம்
எத்தனை எத்தனையோ

Koviloor Digital Library

வெண்ணிலா

ஒரு கிராமியக் காட்சி

அவன் :—

ஆத்திலே நெலவடிக்க
அக்கரையில் நாமிருக்க
சோத்திலே நெனப்பேயில்லே - தங்க ரத்தினமே
சோக்கா யிருக்குதடி - பொன்னு ரத்தினமே

அவள் :—

ஆத்திலே பச்சத்தண்ணி
ஆடிக்கிட்டே போவுதடா
காத்திலே ஏதோ வாசம் - தங்க ராசாவே
கமகமன்னு கமளுதடா - பொன்னு ராசாவே

அவன் :—

முத்துப் போலும் நிலவிதிலே (ஒன்)
மூக்குத்தியைக் கண்டாக்கா
பித்துப் பிடிக்குதடி - தங்க ரத்தினமே
பேச முடியுதில்லே - பொன்னு ரத்தினமே

Koviloor Digital Library

அவள் :—

அம்புலியைக் கண்டுக்கிட்டு
ஆசையுந்தான் கொண்டுக்கிட்டு
தம்புலத்தை இட்டுக்கிட்டு - தங்கராசாவே
தலைக்கிறுக்காப் பேசுறியே - பொன்னு ராசாவே

அவன் :—

சின்னப்பய மவகெணக்கா
செருக்கி நீயும் சிரிக்கையிலே
கன்னத்திலே குளிவிளுது - தங்கரத்தினமே
கண்டுமனம் கவிளுதடி - பொன்னுரத்தினமே

அவள் :—

வேனக்காலம் வந்துதுண்ணு
வெறிபிடிச்சா ஆடுவாக
ஆனாலும் ஒன்னைப்போல - தங்கராசாவே
ஆம்புள்ளையைக் கண்டதில்லை-பொன்னுராசாவே

அவன் :—

பூவரசங் கொப்பிலொரு
புருசங்குயில் கூப்பிடுது
பெட்டைக்குயில் எங்கோ நிண்ணு - தங்கரத்தினமே
பேசுகிற பேச்சைப்பாரு - பொன்னு ரத்தினமே

Koviloor Digital Library

அவள் :—

ஆனித்திரு நாளதிலே
ஆசைமச்சான் ஒன்றோடே
சீனிமுட்டாய் திண்ணுக்கிட்டே - தங்கராசாவே
திருஞ்சதெலாம் நெனப்பிருக்கா - பொன்னு
ராசாவே

அவன் :—

வைகாசி மாசத்திலே
வாய்ப்பான நெலவதிலே
கைவீசி வந்ததெல்லாம்...........
கடக்கரையில் நிண்ணதெல்லாம்.........

அவள் :—

இந்த வருசத்திலும்
இந்த விசாகத்திலும்

அவன் :—

சுங்கடிச் சேலேகட்டி—தங்கரத்தினமே
சோடியாப் போவோமடி—பொன்னுரத்தினமே


Koviloor Digital Library

அவள் :—

சிக்கிலியங் கிராமத்திலே
செறப்பான நெலவடிக்கி..........

அவன் :—

வைக்கப் படப்பைப்பாரு—தங்கரத்தினமே
வைரப் படப்படியோ—பொன்னுரத்தினமே.



Koviloor Digital Library



சந்தனத் தென்றல் வீசும் பொதிகை
சாரல் வந்து சாயும் பொதிகை
அந்தரத் தெழுமுகில் ஆயிரங் கூடி
அடைமழை சொரியும் அழகிய பொதிகை

சந்தனத் தென்றல் வீசும் பொதிகை


தமிழ்முனி அகத்தியன் தவம்செய் பொதிகை
தமிழ்மகள் பிறந்து தவழ்ந்த பொதிகை
தமிழ்தமிழ் எனஎதி ரொலிசெயும் பொதிகை
தமிழ்மணம் எங்கணும் கமழ்ந்திடும் பொதிகை

சந்தனத் தென்றல் வீசம் பொதிகை

Koviloor Digital Library

இலக்கியம் பிறந்துநின் றெழுந்தது மாங்கே
இலக்கணம் வளர்ந்துபின் இணைந்தது மாங்கே
துலக்கமாய்ப் பல்கலை தோன்றிட ஞானமும்
தூயபண் பாடும் துளிர்த்தது மாங்கே.

சந்தனத் தென்றல் வீசும் பொதிகை



Koviloor Digital Library

பொருநைக் கரையிலே

பொருநைக் கரையிலே அன்றொருநாள்
பொன்மகள் ஒருத்தி நடந்து வந்தாள்

பொருநைக் கரையிலே அன்றொருநாள்

இடையுந் துவள இணைவிழி சுழல
நடைதான் உலகம் நமதென் றிடவே

பொருநைக் கரையிலே அன்றொருநாள்

கன்னியென் னருகினில் வந்துநின் றுள்ளன்
கண்களை நம்பா திமைத்தேன்காண்
பின்னை யவளென் பக்கத் தமர்ந்தே
பேசா மொழிகள் பேசினள்—அடடோ

பொருநைக் கரையிலே அன்றொருநாள்

நிலவு முகிலின் நெஞ்சில் நுழைந்தது
நீரில் திரைகள் நெருங்கி அணைந்தன
உலவுந் தென்றல் உலகை வளைந்தது
ஊரெலாம் மோன உலகை சமைந்தது

பொருநைக் கரையிலே அன்றொருநாள்



Koviloor Digital Library

தென்றல் வீசுது

தென்றல் வீசுது—காதில்
　　சேய்மைகள் பேசுது
தென்றல் வீசுது!

முன்றில் தனிலும்—நிலா
　　முற்றந் தனிலும்
சென்று சென்று—நடம்
　　செய்து நின்று

தென்றல் வீசுது


எந்தையர் தென்றல்—இஃது
　　எம்மவர் தென்றல்
முந்தையர் கோடி—முன்னர்
　　மோகித்த தென்றலம்மா

தென்றல் வீசுது

Koviloor Digital Library

வண்டுகள் தம்பூர்!
வரிக்குயில் கீதம்;
பெண்டின மயில்கள்
பேரின்ப நடனம்!

தென்றல் வீசுது



Koviloor Digital Library

அம்பலவாணன்


சினத்தொடு சீறியுன் றன்
சிரத்தினில் நாகமாட
மனத்தினில் அமைதியோடும்
வான்பிறை தவழுமேயோ !

விண்ணவர் நாட்டினின்றும்
விரைவொடு கங்கைவீழ்ந்தும்
கண்ணிமைக் கடையினுள்ளே
கதிரனல் கனியுமோகாண்!


கையினில் ஆடும்அந்தக்
கண்கவர் மானும்உன்றன்
மெய்யினிற் புலியைக்கண்டும்
மிகக்களி கொள்ளுமேயோ !

Koviloor Digital Library

ஐயனின் மகிமையெல்லாம்
ஆருரை செய்யவல்லார்!
ஐயனின் மாயமெல்லாம்
யாவரே அறியவல்லார்!



Koviloor Digital Library



எப்படியோ

சூரியன் தோன்றுவ தெங்கேயோ - அவன்
சோதிபோய் வீழ்வதும் எங்கேயோ
வாரிநீர் தோன்றிய தெங்கேயோ - அதன்
வரவுநீர் செல்வதும் எங்கேயோ

ஆற்றுநீர் வந்ததும் எவ்விடமோ - அந்த
ஆற்றுநீர் செல்வதும் எவ்விடமோ
நாற்றுநெல் விளைவதும் எங்ஙனமோ - மற்றன்
நாற்றுநெல் மறைவதும் எங்ஙனமோ

Koviloor Digital Library

காற்று வீசுதல் எப்படியோ - மணம்
கலந்து கமழுதல் எப்படியோ
சேற்றினி லேஒரு செங்கமலம் - வந்து
செம்மை நகைசெய்தல் எப்படியோ !



Koviloor Digital Library

மழை

மின்னல்ஒன்று மின்னியது மேற்குவானத்தில் - அந்த
மின்னல்ஒளி துள்ளியது மேதினிமுற்றும்
கன்னங் கறுப்பிருளில் கண்பறித்தது - மழை
காடுமலை ஊர்களெலாம்,கொட்டிநின்றது

ஆற்றுநீரிற் சேற்றுநீரும் அணைந்துகொண்டது - வந்த
ஆற்றுநீரும் சேற்றுநீராய்ச் சிவந்துகொண்டது
ஊற்றுநீரில் உடைப்புநீரும் ஓடிக்கொண்டது-முற்றும்
உலகமெலாம் வெள்ளத்திலே மூடிக்கொண்டது



Koviloor Digital Library


பின்னற் சடை

பின்னி முடித்த சடையினிலே - ஒரு
பிறைபூத்து நிற்பதைப் பாரடியோ
பின்னற் சடையினில் பிறைபூத்த வண்ணத்தைப்
பிறைசூடி அறிந்திடக் கூறடியோ

நாகத்தைத் தலையிற் சூடிநின்றான் - அந்த
நாகநாதன் என்றே போற்றிடுவார்
நாகர் தலையினிற் சூடிநின்ற - எங்கள்
நங்கை யரையவர் கண்டிலரோ

Koviloor Digital Library

பின்னிய கார்நிறக் கூந்தலிலே - வைத்துப்
பின்னிவிட் டாயெந்தன் நெஞ்சினையே
பின்னுமக் கூந்தலின் கொண்டையிலே - இசை
பின்னினே கவிதை நெய்தனையே!



Koviloor Digital Library

சொன்னகதை சொல்லு

தாமரையாள் சொன்னகதை சொல்லு—எழிற்
தையலவள் பிறந்தகதை சொல்லு

பூவினங்கள் கூறும்கதை சொல்லு—அந்தப்
பூவையர்கள் பூத்தகதை சொல்லு

பொதிகைமலை உரைத்தகதை சொல்லு—தமிழ்ப்
பொற்புவந்து முளைத்தகதை சொல்லு

குயிலினங்கள் கூறும்கதை சொல்லு—அவை
குரலினிமை பெற்றகதை சொல்லு



Koviloor Digital Library

முதன் முதல்

முதன் முதல் என்றென
நினைவிலை இன்று
முதன்முதல் என்றென.


முதன்முதல் என்றுநின்
முகத்தினைக் கண்டேன்
முதன்முதல் என்றுநின்
முறுவல்கள் கொண்டேன்
முதன்முதல் என்றுநான்
நின்னொடும் ஊடினேன்
முதன்முதல் என்றுநான்
நின்னொடுங் கூடினேன்

முதன்முதல் என்றென
நினைவிலை இன்று
முதன்முதல் என்றென.



Koviloor Digital Library

மனிதன் ஒருவன்



எவனர் கூடும் அங்காடி
என்றும் அறியாப் புதுமையது!
புவனம் வியந்த உத்தமர்கள்
போற்றிப் பரவும் ஒருஞானி
கவனம் கவரும் பான்மையிலே
கையில் விளக்கொன் றேந்திவந்தே
எவனர் கூடும் இடமெல்லாம்
ஏதோ தேடித் தேடிவந்தான்.

Koviloor Digital Library

மனிதர் நால்வர் சேர்ந்தஇடம்
மங்கை நல்லார் பேசுமிடம்
தனிமை விரும்பா மனிதரிடம்
தன்னில் சுகிக்கும் யோகியிடம்
பனிமை தவழும் இரவினிலே
பாலை வார்க்கும் நிலவினிலே
நனிவெங் கனலின் வெயிலினிலே
ஞானி விளக்கி னுடன்சென்றான்.

நாளும் பொழுதும் ஓடினகாண்
நாளும் ஞானி நடந்தனன்காண்
மூளும் ஆவல் உளத்தோடே
முற்றும் யவனர் பார்த்திருந்தார்.
'நாளும் இரவும் ஞானியிவன்
நகைத்தற் கிடமாய் விளக்கேந்திச்
சூழும் கடல்ஆர் உலகினிலே
சோதித் ததனைத் தேடுகின்றான்'

ஒருவன் யவனர் கூட்டத்தே
ஒருநாள் இதனைக் கண்ணுற்றோன்
அருகிற் சென்றே ஞானியிடம்
அன்பாய் இவ்வுரை கேட்டிடுவான்
'விரும்பி இரவும் பகலும்நீர்
விளக்கில் யாரைத் தேடுகிறீர்
சுருதி பரவும் கடவுளைநீர்
சுடர்கொண் டறியச் செல்லுதிரோ?'

Koviloor Digital Library

மின்னல் துவளும் புன்னகையால்
மேதை ஞானி மொழிந்திடுவான்
'பன்னும் நூல்கள் விவரிக்கும்
பரனைக் காண ஆசையில்லை;
மன்னும் மாக்கள் உலகிதிலே
மனிதன் தன்னைத் தேடிவந்தேன்'
என்றே கூறி ஞானியவன்
ஏந்தும் விளக்கை அணைத்துநின்றான்!



Koviloor Digital Library

மரணம்

ஒரு கனவு

படகிலே தனியே சென்றேன்
பௌர்ணமி நிலவு தன்னில்
கடலிலே அலைகள் அன்று
கடுமையாய்ப் பொங்கி ஆர்த்த.

நிலவிலே காந்தம் என்பேன்!
நீரிலே மயக்கம் என்பேன்!
அலையிலே பொங்கும் அந்த
ஆனந்தம் தானே என்பேன்!

நிலவினில் நெஞ்சை விட்டு
நினைவெலாம் இறந்து தானே
உலவினேன் நீரில் வையம்
ஓர்ந்திடாத் தொலைகள் சென்றே.

இங்ஙனம் சென்ற வேளை
இடரேதும் சிந்தியாதேன்
எங்ஙனம் புயல்கள்பற்றி
எண்ணியே பார்த்திருப்பேன்!

Koviloor Digital Library

என்னவோ் தேர்ந்திலேன் யான்
எங்கிருந் தெய்திற் றேதான்
மின்னிடும் நேரத்துள்ளே
மிகப்பெரும் புயல்வந் தாங்கே,

ஓவெனச் சுழன்று வீசி
ஒருநொடிப் பொழுதில் எந்தன்
காவியப் படகு தன்னைக்
கவிழ்த்துடன் சென்றதம்மா

கண்களிற் சுழற்சி கண்டேன்
காரிருள் சூழக் கண்டேன்
தண்ணெனும் தண்ணீர் அல்லால்
தரையினைக் காண்கிலாதேன்

[வேறு]

இருளைப் பிசைந்து நூல்நூற்று
எப்படியோஒரு வலைபின்னி
உருளும் பரிதி தனையதனால்
ஒருவர் யாரோ கொய்துவிட்டார்

[வேறு]

இருளிலே மிதந்து சென்றேன்
இருளிலே சுழன்று சென்றேன்
இருளிலே மருண்டு சென்றேன்
இருளிலே இருளி லே——!

Koviloor Digital Library

என்னதி தென்றே கண்ணின்
இமையினைக் கொட்டு முன்னே
சின்னதோர் வாசல் அங்கே
சேய்மையிற் தோன்றக் கண்டேன்

அச்சிறு வாச லூடே
ஆவல்கொண் டேகி ஏகி
பச்சையைக் கொட்டி விட்ட
பசுந்தரை வந்து சேர்ந்தேன்

கண்ணெலாம் பசும்புற் தோற்றம்
காட்சியே குளிர்மைக் கோலம்
மண்ணெலாம் மணியும் பொன்னும்
மயங்கியே நிரவக் கண்டேன்

[வேறு]

மரணம் என்பதும் இதுதானோ - அந்த
மாய்வெனும் மர்மம் இதுவேயோ
மரணம் என்றுநாம் அஞ்சுவதும் - இம்
மாயப் பெரும்பேர் இன்பமேயோ !

பசும்புற் தரையில் ஊர்ந்து சென்றேன் - நான்
பாய்ந்து சிசுப்போல் தவழ்ந்து சென்றேன்
விசும்பும் நீரும் புல்வெளியும் - மிக
விரும்பி என்னை அழைத்தனகாண்

Koviloor Digital Library

எத்தனை யோபேர் அங்குவந்தார் - அவர்
எத்தனை யோமொழி தாமுரைத்தார்
அத்தனை பேரிலும் அத்தனை மொழியிலும்
அரிய பெருங்குணம் பலகண்டேன்

துன்பம் சஞ்சலம் முதுமையெலாம் - முற்றும்
துடைத்திருந்தது கடலின்நீர்
இன்பம் சாந்தம் இளமையெனும் - நல்
இனிய பண்புகள் தாம்கண்டேன்

காகம் என்னை அஞ்சவில்லை - ஒரு
கடும்புலி என்மேற் பாயவில்லை
நாகம் கிரி மான்களெலாம் - மிக
நண்பொடு தானே நடந்துவந்த

பசுஒன் றங்கு துறையிறங்கி - மெல்லப்
பச்சைத் தண்ணீர் பருகிற்று
சிசுவொடு சிங்கம் வந்தங்கு - உடன்
சேர்ந்து தானும் பருகிற்று

எல்லாம் என்னை நோக்கினுமே-அதில்
ஏதும் புதுமை தோற்றவில்லை
கல்லால் அடிக்கும் நாயுமெனை-அங்கு
கண்டு வாலைக் குழைத்ததடா

Koviloor Digital Library

வேறு

குயிலொன் றென்னிடம் குயில்காணும்
கூகை என்னைக் கூகையெனும்
மயிலொன் றென்னை மயிலென்று
மகிழ்ந்தே என்னுடன் நடமாடும்

புலியின் கண்ணுக்கு யான்புலியாம்
பொன்மான் தனக்கு நன்மானும்
எலியினுக் கென்னுடல் எலியேயாம்
எவ்வெவ் வுயிர்க்கும் அஃதேயாம்

வேறு


என்னே புதுமை ஏதே ஒருமை !
என்னே இதுவோ மரணமம்மா
என்னே இன்பம் ஏதே மகிமை !
என்னே இதுவோ மாய்வம்மா

இவ்விதம் எண்ணிய போதங்கே
ஏதோ என்னைக் குலுக்கியதால்
செவ்வி கலைந்த திகைப்போடே
சிரங்கு லுங்கிக் கண்விழித்தேன்

Koviloor Digital Library

வேறு

விண்ணிலே நிலவு காணோம்
வேலையில் அலைகள் ஓய்ந்த
பண்ணிலே வானம் பாடி
பரிதியின் உதயம் பாடும்.



4

Koviloor Digital Library

குருக்களையா

குருக்க ளையா விழிகளிலே
கூர்மை உண்டு பாரென்பார்
குருக்கள் கண்ணை எந்நாளும்
கூர்ந்து கவனித் தேஅறியேன்!
இருந்து பூஜை செய்கையிலே
இரண்டு விழியும் மூடிடுவார்
அருகில் திருநீ றுருளையிலோ
அடியேன் கண்ணை மூடிடுவேன்!

Koviloor Digital Library

கைலயங்கிரியில்

கைலயங் கிரியில் நடந்ததிது
காலம் கடந்த காலத்தே

மயில்கள் மயங்கும் சாயலினுள்—இள
மான்கள் வியந்த பார்வையினுள்
குயில்கள் பரவும் குரலுடையாள்—எழில்
கொஞ்சிடும் அஞ்சுகப் பார்வதியாள்,

பதிபரன் ஏதோ சிந்தனையில்
படிந்தே அமர்ந்த வேளையினில்
பதுங்கி மெல்ல நடந்துவந்து
பையக் கண்களைப் பொத்திநின்றாள்.

பார்வதி யம்மை வந்துநின்று
பரமன் கண்களைப் பொத்தியதும்
பாரீர் பாரீர் பாருலகீர்
பரிதிச் சுடரோன் அணைந்துவிட்டான் !

Koviloor Digital Library

பரிதிச் சுடரோன் அணைந்ததுமே
பாரினை இருட்டிரை மூடியதால்;
பரிதி யணைந்தஅப் பான்மையிலே
பாரின் சுழற்சி நின்றதம்மா !

பூக்கள் கண்ணை மூடிவிட்ட
புட்கள் ஒலியை நிறுத்திவிட்ட
ஈக்கள் தேனை மறந்துவிட்ட
இன்பம் இச்சை மாண்டுவிட்ட !

ஓடும் நதியும் நின்றதடா
ஊறும் கேணியும் தூர்ந்ததடா
பாடும் குயிலும் வாயடைத்துப்
பண்கள் மறந்தே போனதடா !

அண்டம் பிண்டம் சரம் அசரம்
அனைத்தும் ஒடுங்கி உறங்கினவே
கண்டம் கரிய கண்ணுதலோன்
கண்கள் மூடிய காரணத்தால் !

Koviloor Digital Library

வேறு

வானில்லை மண்ணில்லை வண்ணவகைக் கோளில்லை
கானில்லை கடலில்லை காட்சிகள்தாம் ஏதுமிலை
கோனில்லை குடியில்லை கும்பிடவும் தெய்வமிலை
ஊனில்லை உயிரில்லை ஒன்றுமே இல்லையடா.

வேறு

திகைத்து நின்றனர் தேவரெலாம்
திசைமுகன் திகைப்பொடு நின்றுவிட்டான்
நகைத்தே இருந்தனன் பரமனவன்
நங்கை பார்வதி நடுங்கிவிட்டாள்.

காலம் அறியாக் காலத்தே
கைலயங் கிரியில் நடந்ததிது

வேறு

பதறியே நடுநடுங்கிப் பதைபதைத் துயிர்த்துவேர்த்து
உதறினள் கைகள்தம்மை உலகெலாம் ஈன்றஅன்னை

Koviloor Digital Library

வேறு

பாரிற் சுடரோன் கண்விழித்தான்
பங்கயம் புன்னகை பூத்ததடி
ஊரிற் கானில் வானிலெங்கும்
உயிரின் தத்துவம் உதித்ததம்மா

நதியிற் தண்ணீர் ஓடினதால்
நன்னீர் கேணியிற் சுரந்ததுகாண்
கதியிற் சுழன்றன மீண்டுமிந்தக்
காலப் பம்பரக் காட்சியெலாம்!


வேறு

பச்சை பரந்தது
பயிர்கள் செழித்தன
பாரெலாம் நல்வளம் பாய்ந்ததடா;

இச்சை பிறந்தது
இனிமை சிறந்தது
எங்கணும் அழகு சிலிர்த்ததடா!

Koviloor Digital Library

கைலயங் கிரியில் நடந்ததிது
காலம் கடந்த காலத்தே.



Koviloor Digital Library

தீபாவளிக் கும்மி

தீபச் சுடரினை ஏற்றுங்கடி—வீட்டுத்
தெய்வமென் றேஅதைப் போற்றுங்கடி
தாபச் சுழலினைச் சுற்றுங்கடி—சுற்றிச்
சுற்றிவந் தேகும்மி தட்டுங்கடி

பாமை புகழினைப் பாடுங்கடி—சத்ய
பாமை புகழ்பாடக் கூடுங்கடி
தீமை தனைக்கொன்று தேவர் தமையாண்ட
தீபா வளியென்றே ஆடுங்கடி

[தேவர் கண்ணனிடம் முறையிடல்]

மண்ணையா ளும்செங்கோல் மன்னர்தமை—மண்ணில்
மண்டி யிடச்செய்தே ஏவலிட்டான்
விண்ணையும் ஏறியே வெம்மைசெய்தான்—அந்தோ
விலங்கு மிட்டான்எம் கைகளிலே

எண்ணித் தொலையாத இன்னல்செய்தான்—அவை
இன்னும் தொலைந்தபா டில்லைதாம்காண்
கண்ணினைக் காக்கும் இமைபோலே—யாவும்
காத்திடு வாயெமைக் காத்திடாயோ

Koviloor Digital Library

[கண்ணன் வானலோகம் செல்லுதல்]

வானவர் நாடுற வேயெழுந்தான்—பாமை
வந்திடு வேன்நானும் என்றுளடி
மோனக் குறுநகை செய்தானடி—செயல்
முற்றும் உணருமத் தேவனடி

[போர்க்களத்தில்]

தேரினை சாரத்யம் செய்தாளடி—அதை
தேவர் இமையாது பார்த்தாரடி
தேரினை ஓட்டும் கலைக்கான—அதி
தேவதை யோஇவள் என்றாரடி

தீமையின் உருவினைத் தானெதிர்த்து—கணை
தெய்வ வலிகொண்டே எய்தானடி
தீமையெ லாமன்றே தீர்ந்திடத்தான்—தர்மத்
தெய்வமிச் சூழ்ச்சியைச் செய்ததோடி

போரினி லேவல்ல கண்ணனவன்—ஒரு
பொல்லாத மாயம் புரிந்தானடி
தேரினி லேயவன் சோர்ந்துவிழ—பாமை
தீரமொடு வில்லைக் கைப்பிடித்தாள்

Koviloor Digital Library

வில்லை வளைத்தாள் அவ் வில்லினையே—ஒத்த
வீரப் புருவம் வளைந்ததடி
எல்லை யிலாததோர் எக்களிப்பு—வானம்
எங்கும் விரிந்து பரந்ததடி

எய்துவிட் டாளொரு பாணமதோ—என
இமையவர் கூறிவாய் மூடுமுன்னே
கொய்துவிட் டாளவன் ஆவியினைப்—பெருங்
குன்றினைப் போலவன் வீழ்ந்தானடி

வீழ்ந்தானடி தீயோன் வில்லுடனே—உடன்
வீழ்ந்ததடி வெய்ய தீமையெலாம்
ஆழ்ந்தாரடி தேவர் ஆனந்தத்தே—அண்டம்
அனைத்தும் சுழன்ற தின்பத்திலே

குத்து விளக்கினை ஏற்றுங்கடி—பெண்மைக்
குலத்தின் புகழினை ஏற்றுங்கடி
குத்து விளக்கினைப் போற்றுங்கடி—பெண்மைக்
குலத்து விளக்கினைப் போற்றுங்கடி

Koviloor Digital Library

தீபத்தைச் சுற்றிக்கை தட்டுங்கடி—வீட்டுத்
தெய்வத்தைச் சுற்றிக்கை தட்டுங்கடி
தூபத்தி லேஅகில் கொட்டுங்கடி—பாமை
துதிம ணக்கக்கை கொட்டுங்கடி.



Koviloor Digital Library

தமிழ் அன்னை

முன்னொரு குள்ள முனிவன் அகத்தியன்
மூன்று முழுதுணர்ந் தோன்
பின்னெடுங் காலமிப் பாரிற் தவஞ்செய்து
பெற்றன ளுன்னை யே
அன்னை யவள்இம வான்புதல்வி கூத்தன்
ஆகத் தமர்துணை வி
நின்னை விரும்பி வளர்த்தனள் அன்பொடு
நீண்ட பொதிகையி லே

துன்னரும் கீர்த்திசேர் மன்னவன் பாண்டியன்
தூய அறம்வளர்த் தோன்
பன்னரும் பேறளித் துன்னை மணந்தனன்
பாவலர் சங்கம தில்;
நின்னரும் புத்திரர் ரத்தினம் அன்னவர்
நித்தமும் பல்பனு வல்
உன்னரும் நேர்த்தியோ டுன்பதம் சூட்டினர்
உள்ள மகிழ்வுட னே

Koviloor Digital Library


சைவர்கள் வைணவர் சமண சமயத்தர்
சாற்றுபல் கொள்கைய ரும்
தெய்வம் எனத்தொழு தேத்தினர் பாடினர்
தேனெனப் பாலென வே;
ஐவர்தம் காப்பியம் அருகர் இலக்கணம்
ஆயபல் சாத்திரங் கள்
கைவரு பண்பொடு கண்டவர் கோடியுன்
கட்டிம ணிப்புதல் வர்

வேறு

உம்பர் நாட்டின் உவகை எல்லாம்
இம்பர் தமக்கே இராம காதையால்
அன்பொடு விரும்பி அளித்த மாகவிக்
கம்பன் நின்மகன்; வள்ளுவன் நின்மகன்;
முத்தொள் ளாயிரம் மொழிந்தவன் நின்மகன்;

Koviloor Digital Library

நலந்திகழ் நால்வர் நயமிகும் ஆழ்வார்,
அத்தனை பேருநின் அருந்தவப் புதல்வர் ;
ரத்தினப் பேழையே முத்தமிழ்க் குமரி !
நின்புகழ் பெரிது நினைப்பிற்(கு) அரிது
நின்னை வணங்கினென் நின்னருள் நாடினென்
நெஞ்ச மலரினை நின்பதம் சூட்டினென் ;
பதத்தினிற் சூட்டிய பனிமலர் தன்னை
வாசனை ஓர்தல் வழக்கிலை ;
மாசினைக் கருதாய் ; மகிழ்ந்தெனை அருளே.



Koviloor Digital Library

இளவேனில் தானோ?

இளவேனில் தானோநீ
ஏந்திழையே சொல்லிடடி
இளவேனில் தானோநீ!

இளவேனில் போன்றாய்நீ
என்றாலவ் வேனிற்கும்
உளதோஉன் குளிர்மையெலாம்
உளதோடி பெண்ணிலவே
இளவேனில் தானோநீ

உன்முகம்போல் மலருண்டு
உன்குரல்போற் குயிலுண்டு;
உன்னைப்போல் இளவேனில்
ஒருமுறுவல் பூத்திடுமோ?
உன்னைப்போல் மௌனத்தால்
உரைசெயுமோ பூங்குயில்கள்?
உன்னைப்போல் இளவேனில்
உளதோநீ சொல்லிடடி
இளவேனில் தானோநீ

ஒருமுத்தம் தந்திடுமோ
உன்னைப்போல் இளவேனில்
ஒருமுத்தம் தந்துவிட்டு
உயிரெல்லாம் கொண்டிடுமோ!
இளவேனில் தானோநீ

Koviloor Digital Library

எதிரொலியாள்

(சிறுவயசில் மழையிலே அஞ்சியோடியவன் அவளை சந்தித்தேன், முதல் முதல்)

இடித்தது முரசு மேகம் ;
ஈட்டிகள் எறிந்த மின்னல் ;
துடித்தது வைய முற்றும் ;
தொலைந்தன நீரில் யாவும் ;
அடித்தது காற்று சுற்றி,
ஆர்த்தது பொங்கி வெள்ளம் ;
வெடித்தது புவியின் நெஞ்சம்,
விளைந்ததோ ஊழி என்னு !

நெஞ்சிலே நினைவ ழிந்து
நேர்ந்ததே இன்னல் என்று
அஞ்சினேன் ; ஓடி யோடி
அங்கொரு குகையுள் புக்கேன் ;
மிஞ்சிய கேட்டி னின்றும்
மீளுதல் தெரியே ளுகி
அஞ்சிய குரலி னேடே
" அம்மவோ அம்மா " என்றேன்.

Koviloor Digital Library

"அம்ம"வென் றழைத்த லோடும்
அச்சிறு குகையி லெங்கோ
"அம்ம"வென் றொலித்தல் கேட்டேன் ;
அச்சமோ டதிச யத்தால்
"அம்மம்ம" என்றேன், மீண்டும்,
"அம்மம்ம" என்ற தம்மா !
"அம்மம்ம" என்றேன், மீண்டும்,
"அம்மம்ம" என்ற தம்மா !

(பின்னர் வாழ்விலே அவள் பின்னிக்கொண்டாள்)

குகையிலே ஒலித்த ஓசை
கூடவே வந்த தேயோ !
நகையிலே, இயற்கை வண்ண
நலத்திலே மூழ்கி, இன்ப
மிகையிலே இதய வேகம்
மிஞ்சியே பாடும் போதும்,
குகையிலே ஒலித்த ஓசை
கூடவே ஒலிக்கு மாலோ !

Koviloor Digital Library

(தூக்கத்திலும் அவள் என்னைப் பிரியவில்லை)

அன்பர்தம் உதவி யின்றி,
ஆறுதல் ஏது மின்றி,
உன்னிமூச் சுயிர்க்கும் போதே
உடனங்கோர் உயிர்ப்பு கேட்கும்;
இன்னல்கள் வந்த காலை,
இடரிலே வருந்தும் வேளை,
மன்னியே நெஞ்சம் விம்ம
மற்றுமோர் விம்மல் கேட்கும்

(இயற்கையிலெல்லாம் அவள் நின்று காட்சி தந்தாள்)

தெள்ளிய நல்ல தண்ணீர்
தேனெனப் பாயும் ஓடை;
அள்ளியே சுகத்தை நெஞ்சின்
அகத்திலே கொட்டும் தென்றல்;
புள்ளினம் இசைக்கும் கீதம்
புவியின்நல் லோசை யெல்லாம்
துள்ளியே ஒலிக்கும் அந்தத்
துணையொலி யாதோ அம்மா!

Koviloor Digital Library

(அவள் யாரென்ற கேள்விக்கு அவளே பதில் சொல்லுகிறாள்)

புதிரிதன் விடைகா ணாமல்
    புரியவும் வகையில் லாமல்,
மதிமிகக் குழம்பிச் சித்த
    மயக்கினிற் திகைத்து நின்றே,
“இதன்வழி யாதோ இஃதும்
    என்னவோ ஏதோ” என்றேன்;
எதிரொலி யாளும் சேர்ந்தே
    “என்னவோ ஏதோ” என்றாள்!

Koviloor Digital Library

காதல் நாயகி

கடலுக் கப்பால் ஒருதீவில்—என்
காதல் நாயகி வாழ்கின்ருள்
கடலுக்கப்பால் ஒருதீவில்.

கண்கள் காணு ஒருதீவில்—என்
காதல் நாயகி வாழ்கின்ருள்
கண்கா ணுத ஒருதீவில்—அவள்
கடலுக் கப்பால் ஓர்தீவில்.

கடல்அலை அவள்புகழ் முழக்கிடுமே!
காற்றும் அவள் இசை பரப்பிடுமே!
கடல்மீன் அவள்பெயர் உரைத்திடுமே
கண்கா ணுத அத்தீவில்!

கடலுக் கப்பால் ஒருதீவில்—என்
காதல் நாயகி வாழ்கின்ருள்
கடலுக் கப்பால் ஒருதீவில்!

Koviloor Digital Library

✧ தீபாவளிப் பாட்டு ✧

சிறுவர் களியாட்டம்

காலையில் எழுந்தெண்ணெய் தேய்த்தோமடா-மிகக்
களிப்புடனே வெந்நீர் குளித்தோமடா
நீலவானத் தில்இடி இடிக்குதென-யாரும்
நித்திரைவிட் டெழுவெடிப் போடுவமடா

சாயஞ் சரிகைக்கதர் கட்டுவமடா-மிக
சாக்கிரதை யாய்வெடிப் போடுவமடா
காயம் படாமல்மிகக் கவனமாக-அந்தக்
கல்வெடி எறிந்துபூமி பிளப்பமடா

யானைவெடி சீனவெடி குதிரைவெடி-மற்ற
எவ்வெடியும் இங்கிருக்காம் ஓடிவாடா
போனதீபா வளிபோட்ட வெடியைவிட—இன்று
புதிது புதிதாய்ப்பல இருக்குதடா

நரகாசு ரன்கதையைப் பாட்டிசொல்லட்டும்-அது
நமக்குத் தெரிந்தேயாக வேண்டியதோடா
நரைத்துத் திரைத்துப்போன கிழங்களுக்கும்—நம்போல்
நாகரிக வெடிபோடத் தெரியுமோடா

Koviloor Digital Library

மாடியிலே போயிருக்கும் அத்தான்முதுகில்—மெள்ள
மாப்பிள்ளை வெடிவீசிப் போடுவமடா
ஓடிப்பாய்ந்து நம்மையவர் அடிக்கவந்தால்—ஒரு
ஒத்தைவெடி போட்டுவிட்டே ஓடுவமடா

புத்தப் புதியஉடை தரித்தராஜம்—கைக்குப்
பூமத்தாப்புக் கம்பியொன்று கொடுத்திடடா
மெத்தைச் சுவரருகே போடாதேயடா—ஜிம்மி
மேனிசிலிர்த்துமிக நடுங்குதடா.


Koviloor Digital Library

என்னேயோ

உன்முகம் காணும் போதெலா மெனக்கே
ஒருபேர் உவகை உதிப்பதென் னேயோ
உன்குரல் கேட்கும் போதெலாம் செவியில்
ஒருபேர் இன்பம் சுரப்பதென் னேயோ

உன்முகம் காண, உன்னுடன் பேச,
ஒருபேர் ஆசை உளத்தினில் ஏனோ!
உன்முகம் காணும் போதெலா மெனக்கே
ஒருபேர் உவகை உதிப்பதென் னேயோ!

மங்கையர் கோடி மணிப்புரு போலே
மாநிலம் முற்றும் மயக்கியே திரிவர்;
அங்கவர் யாரிலும் அத்தனை பேரிலும்
இங்குன தழகில் என்னடீ புதுமை!
இங்குன திடத்து என்னடீ மகிமை!



Koviloor Digital Library

மனமும் மரணமும்

மடிய வேண்டுமென்ருல்—இந்த
மனமும் உறுதியில்லை
மடிய ஆசையென்ருல்—அந்த
மரணம் வருகுதில்லை

மடிய வேண்டுமென்ருல்

கொடிய இன்னல்களும்—நெஞ்சிற்
குமையும் சஞ்சலமும்
இடியும் மின்னல்களும்—அம்மம்ம
இத்தனை போதுமென்றே

மடிய வேண்டுமென்ருல்

நம்புதற் காருமில்லை—நம்மையும்
நம்புவார் யாருமில்லை
வம்புகள் செய்திடுவார்—வலிய
வட்புக் கிழுத்திடுவார்

மடிய வேண்டுமென்ருல்

Koviloor Digital Library

நெஞ்சினில் ஆசையில்லை—வாழ்விலே
நேசம் கடுகுமில்லை
பஞ்சினில் மென்மையில்லை—எந்தன்
படுக்கை நோகுதம்மா

மடிய வேண்டுமென்றால்

உண்ண விருப்பமில்லை—நல்ல
உடையும் விரும்புதில்லை
எண்ணத் தொலையுதில்லை—எந்தன்
இடர்கள் தீருதில்லை

மடிய வேண்டுமென்றால்

வாழ்விற் பலனுமில்லை—இனி
வாழ்ந்து பயனுமில்லை
வாழ விருப்பமேனோ—இன்னும்
வாழ்ந்து தொலைப்பதேனோ

மாள வேண்டுமென்றால்—பாவி
மனசும் ஒப்புதில்லை
மாள விருப்பமென்றால்—பாழும்
மரணம் வருவதில்லை.

Koviloor Digital Library

உதாசீனம்

உ தா ஸீ ன மே
உருவமேயோ ?—உன்
உருவமே யோ ?
உ தா ஸீ ன மே

ஒன்றிரண் டாய்முடித்த கூந்தல்—அதில்
உதிர உதிரநிற்கும் பூக்கள்
ஒன்றிரண் டாயுதிரும் வார்த்தை—அதன்
ஊடே தொனிக்குமொரு கர்வம்

உதாஸீனமே

உடலிலே துவளும்முந் தானை—அந்த
உடலினைத் தொட்டோடும் சேலை
கடலிலே தவழும் பேர் அலைபோலே—நீ
காணக் குலுங்கிவரும் காட்சி

உதாஸீனமே உருவமேயோ

Koviloor Digital Library

பொழுது சாயுது

[வீழ்ச்சி என்பது ஒரு வேதனை :
சூரியன் வீழ்ச்சியோ ஒரு இன்ப வேதனை !]

பொழுது சாயுது பொருநையிலே - மாலைப்
பொன்கதிர் பாயுது நீரினிலே
விழு(கு)து ஞாயிறு குன்றினிலே - அந்த
வீழ்ச்சியு மேஇன்பக் காட்சியம்மா

[படகோட்டிகள் பொருநை நதியிலே தண்டு வலிக்கிறார்கள்]

மேக்குவானம்சிவந்துபோச்சு பொருநைக்கப்பாலே-அதோ
மேலைக் கதிர்கள் விழுந்துபோச்சு பொதிகைக் கப்பாலே
காக்கை கருடன் கொக்குக் கூட்டம் கடலுக் கப்பாலே–எவ்விக்
காற்றிலேறி மறைஞ்சு போச்சு கண்ணுக் கப்பாலே

செக்கர் வானம் சொக்கத்தங்க மாகத் தோணுதே–அதிற்
செங்கற் பொடியும் ஊடேஊடே தூவிக்காணுதே
பக்கமெல்லாம் தங்கரேக்கு பளபளக்குதே—யதைப்
பார்க்கப் பார்க்கக் கண்ணைப் பற்றிப் பறித்துக் கொள்ளுதே

Koviloor Digital Library

ஆத்துத் தண்ணி அக்கரையை அணைச்சு ஓடுது—சின்ன
ஆட்டுக்குட்டி ஒண்ணதிலே அந்தர் போடுது
காத்துவந்து காதுக்குள்ளே கதைகள் சொல்லுது—ஒரு
கறுத்தமேகம் காத்திலேறிக் கடல் கடக்குது

ஆத்தங் கரையில் அரசமரம் சலசலக்குது—அந்த
அரசிலைக ளத்தனையும் பொன்னு லுப்புது
பூத்து நின்னு 'காத்து வாங்கும்' பூங்கொடி ஒண்ணு—ஏலே
புத்தம்புதுப் பொண்ணைப் போலே மெத்த நாணுது

[கரையிலே காதல் நாடகம்]

தண்ணிக் குடமெடுத்துத்
தளுக்கு நடைதொடுத்துத்
தண்ணிக்குப் போறபெண்ணே - தன்னுதானனு
தலைதூக்கிப் பாருபெண்ணே தில்லாலாலேலோ

கோணமீசை முறுக்கழகா
குங்குமப் பொட்டழகா
ஆணுக்கு ஆணழகா - தன்னுதானனு
ஆண்பிள்ளைச் சிங்கமடா தில்லாலாலேலோ

பொழுதுநல்லா சாஞ்சிரிச்சு
பொறிஞ்சவெயில் ஓஞ்சிருச்சு
உழுதவரும் தேஞ்சிருச்சு - தன்னுதானனு
ஒங்கதையைச் சொல்லீடடீ தில்லாலாலேலோ

Koviloor Digital Library

[திரைகடல் ஓடித் திரவியம் தேடச்சென்றுன் அவன் ;
அவள், அவன் வரவு நோக்கி நிற்கிறுள்]

ஆற்றில் மிதந்துவரும்
ஆயிரந் தோணியிலும்
வேற்று முகந்தானே - தோழீ
வேந்தரங்கே இல்லையோடீ

பொழுது விடிந்து, பகற்
பொழுது விழுந்த மட்டும்
அழுது சிவந்த தல்லால் - கண்கள்
அவர் வரவு கண்டதில்லை

கண்ணுல் சொரிந்த முத்தைக்
காதலால் மாலை கட்டிப்
புண்ணியர் வருவாரெனப் - பாவி
பொழுதெல்லாம் காத்திருந்தேன்

மண்ணில் பிறக்கவென்று
மாதவங்கள் செய்ததில்லை
பெண்பிறந்து பட்டதெல்லாம் - அம்மா !
பேச்சுக் கடங்குமோடீ

Koviloor Digital Library

[ஆற்றங்கரைக் குல தெய்வங்களுக்குப் பூசை போடுதல்]

ஆலமரத்தடிப் பிள்ளையாரே
அரச மரத்தடி நாயகரே
வேல மரத்தடிப் பிள்ளையாரே
வில்வ மரத்தடி நாயகரே

பூடம் போட்டிருக்கோம் சொள்ளமாடா
பூசை போட்டிருக்கோம் சொள்ளமாடா
சூடம் கொளுத்திவச்சோம் சொள்ளமாடா
சோற்றைக் குவிச்சுவச்சோம் சொள்ளமாடா

[பெண்டுகள் பூசை]

பொருநைக் கரையிலே புளியந் தோப்பிலே
பூமி முழுவதும் காத்தவளே
கருணை இசக்கியே காவு கொடுத்தோம்
கடைக்கண் பார்த்தெமைக் காக்கணுமே

Koviloor Digital Library

[மாலை என்ற நாடகத்தின் ஐந்தாவது அங்கம்]

விழுந்தனன் பகலோன் அந்த
மேலைவான் மலையில் மோதி
விழுந்தனன் கரங்கள் சோர
வென்றசெங் கோலும் தாழ
எழுந்தனன் உதய சந்த்ரன்
இளநகை இனிது காட்டி
எழுந்தது தூய வானில்
எழிலொடு புதிய ஆட்சி



Koviloor Digital Library

தாரகை

தனிமையில் மின்னுது தாரகை ஒன்று
தன்னக் தனியே வானிலே நின்று
தனிமையில் மின்னுது.


மனிதரின் உள்ளத் தாசையைப் போலே
மாமுனி வோர்மன முடிவினை ஒத்தே
தனிமையில் நீல வானிலே நின்று
தாரகை ஒன்று மின்னுதே இன்று

தனிமையில் மின்னுது தாரகை ஒன்று

Koviloor Digital Library

நீலம் படர்ந்த வானக் கோடியில்
நினைவினுக் கெட்டா தொருதொலை முடிவில்
கோலச் சுடரொளி மினுமினுத் திடவே
குவலய நங்கையோ டுறவுகள் பேசித்

தனிமையில் மின்னுது தாரகை ஒன்று



Koviloor Digital Library

ஏனே?

மலரே ஏன்நீ உதிர்கின்ருய்
மங்கையே ஏன்நீ முதிர்கின்ருய்

பகலே ஏன்நீ மாய்கின்ருய்
பால்நிலா ஏன்நீ தேய்கின்ருய்

கடலே என்ன இரைகின்ருய்
காற்றே என்ன கரைகின்ருய்

நதியே யாரைப் பாடுகின்ருய்
நாளே எங்கே ஓடுகின்ருய்.

? ? ? ?

Koviloor Digital Library

கலைக்கோவில்

கோவில் அமைத்திடுவோம்—திருக்
குற்றா லத்தினில்
கோவில் அமைத்திடுவோம்—கலைக்
கோவில் அமைத்திடுவோம்

வீணையும் குழல்களுமே—செய்வோம்
விந்தைப் பல்லியங்கள்
ஆணைகள் தாம்விடுத்தே—சேர்ப்போம்
அரும்பல வாத்தியங்கள்

கோவில் அமைத்திடுவோம்

தூணிலும் கல்லிலுமே—கோயிற்
சுவர்மதில் எங்கணுமே
பேணிடு வோம்கலைகள்—பேணிப்
பேரின்ப மேசமைப்போம்

கோவில் அமைத்திடுவோம்

சுவடிகள் திரட்டிடுவோம்—பழம்
சுவடிகள் அச்சிடுவோம்
உவகைசேர் கவியரங்கம்—கூட்டி
உயர்வுகள் செய்திடுவோம்

கோவில் அமைத்திடுவோம்

Koviloor Digital Library

பரதம் பயின்றிடுவோம்—பழம்
பண்கள் வளர்த்திடுவோம்
விரதம் எடுப்போம்நாம்—கலை
விந்தைகள் ஆற்றிடவே

கோவில் அமைத்திடுவோம்



Koviloor Digital Library

எழில்

(விண்ணைத் தொட்டுப் பிடிப்பது போல் ஒரே நேராகச் சென்ற ராஜ பாட்டையிலே இருவர் நடந்து போயினர். பூந்தோட்டத்தில் ஒய்யாரமாக நின்ற ரோஜாச் செடியைப் பார்த்தான் முன்னவன்; 'எவ்வளவு மெல்லிய மலர்; ஆனால் அதைச் சுற்றி எவ்வளவு பயங்கர முள்' என்றான்.

இரண்டாமவன் சொன்னான் 'எவ்வளவு பயங்கர முள்; அதன் மத்தியில் எவ்வளவு மெல்லிய மலர்'

ராஜபாட்டையிலே மேலும் நடந்து சென்றனர் இருவரும். சேற்றிலே தாமரை மலர்ந்து நின்றது, முதலவன் சொன்னான்: 'எவ்வளவு அழகிய மலர்; ஆனால் அதைச் சுற்றி எவ்வளவு குழைவான சகதி'

இரண்டாமவன் சொன்னான் 'எவ்வளவு குழைவான சகதி; அதன் மத்தியில் எவ்வளவு அழகிய மலர்.'

ராஜபாட்டையில் மேலும் நடந்து சென்றனர் அந்த இருவரும். பகல் விலகி வையத்தை இருள்த்திரை மூடியது. முதலவன் சொன்னான் 'எவ்வளவு பிரகாசமான நிலா; அதைச் சுற்றி எவ்வளவு கருமையான மேகம்'

Koviloor Digital Library

இரண்டாமவன் சொல்லுவான்: 'எவ்வளவு கருமையான மேகம்;
அதன் மத்தியில் எவ்வளவு பிரகாசமான சந்திரன்')

பாலப் பருவத்தாள் பால்பொழியும் தன்முகத்தாள்
பார்வை கவர்ந்திடுமோர் பண்புடைய பிராயத்தாள்
கோலமிகு வீணையிலே கூட்டியதோர் பண்போலும்
கோதில்லா வடிவழகு கொண்டுநின்ற சுந்தரியாள்.

வண்ணமிகு பெண்ணவளை வானத்து மோகினியை
வண்ணங்கள் நீபெற்ற வகையென்ன கூறென்றேன்;
பெண்ணவளோ மாற்றங்கள் பேசாமல் வானத்துப்
பிறைமதியைக் கண்காட்டிப் பெட்புறவே சென்றுவிட்டாள்

வானத்தில் பூத்திடுமவ் வானமலர் வெண்மதிக்கு
வைரச் சுடரழகை வழங்கியவர் யாரென்றேன்
வானச் சுடர்மதியும் வட்டநகை செய்துரைக்கும்
'வாய்த்த அழகில்லை வண்கதிரோன் வார்த்ததிது'

நித்தம் உலகளக்கும் நெடியோன் கதிரவனை
"நீபெற்ற எழிலுக்கு நெறியென்ன சொல்லென்றேன்'
" இத்தரணி விண்ணுதி எழில்பஞ்ச பூதமுற்றும்
எய்தியதோர் அழகெல்லாம் வானத்தே" என்றுரைத்தான்

வான முகட்டினையே 'வாய்திறந்து சொல்' லென்றேன்
"வகைவகையாய் வர்ணங்கள் வந்தவகை என்னென்று"
கானம் இசைப்பதுபோற் காருலவு வான்சொல்லும்
'காட்சியிலே இல்லையது கண்களிலே உள்ளதடா."

Koviloor Digital Library

பிரிவு

நினைவிருக்க வேணும்—உன்மேல்
நேயம் இருந்த தென்ற
நினைவிருக்க வேணும்.

முனைநாள் நாம் இருவரும்
மோக மிகுதியிலே
அனைத்துல கும்மறந்தே
ஆனந்த மாயிருந்த

நினைவிருக்க வேணும்

தந்தைக்குப் பயந்தும்
தாயினுக்(கு) அஞ்சியும்
முந்தியே பேசிவைத்து
முகமறை வாகவந்து
அந்திப் பொழுதினிலே
ஆற்றின் கரையருகே
சந்திரன் காயும்வேளை
சந்தித்த காலமெல்லாம்

நினைவிருக்க வேணும்

Koviloor Digital Library

இருவரும் மணந்துகொண்(டு)
இன்பமாய் வாழ்வோமென்றே
கருதி யிருந்தோம்பல
கனவுகள் கண்டோமடி ;
பரிதியின் மேலுமிந்தப்
பால்நிலா மேலுந்தானே
உறுதிகள் கோடிசெய்தோம்
உன்மத்த ராயிருந்தோம்

நினைவிருக்க வேணும்

இனிஒரு பொழுதும்நாம்
இவ்விதம் பார்ப்பதில்லை ;
இனிஒரு நாளுமேநாம்
இருவரும் சேர்வதில்லை ;
இனிய கதைகளெல்லாம்
இனிநமக் கில்லையடி ;
இனிமேல்நீ இன்னொருவர்
இல்லத் துரிமையம்மா !

நினைவிருக்க வேணும்

Koviloor Digital Library

பொற்சிவிகை

ஏகாந்தச் சாலையிலே
    ஏகுதொரு பொற்சிவிகை
ஆகாய வீதியிலே
    அசைந்தேகும் கூன்பிறைபோல்

ஏகாந்தச் சாலையிலே

அந்தி மயங்கிவர
    அழகென்பாள் கொஞ்சிவர
சுந்தரஞ்சேர் இளங்காற்றுச்
    சோபனங்கள் சொல்லிவர

ஏகாந்தச் சாலையிலே

Koviloor Digital Library

மண்ணோடு விண்வந்து
மருவிநிற்கும் எல்லையினை
நண்ணிப் பிடித்திடவே
நடந்தேகும் சாலையிலே

ஏகாந்தச் சாலையிலே

இடுப்பில் குடம்தாங்கி
இசைகுலுங்கச் செல்லுமொரு
துடிப்பு மிகுந்தஎழிற்
துளுவத்துப் பெண்போலே

ஏகாந்தச் சாலையிலே

சால அழகியதோர்
சல்லாத் திரையிட்டுக்
கோலச் சிறுமணிகள்
குணுகுணெனக் கிணுகிணென

ஏகாந்தச் சாலையிலே ஏகுதொரு பொற்சிவிகை

Koviloor Digital Library

கன்னி

கன்னிப் பருவத்துப் பெண்மயிலே—உந்தன்
கட்டழகெல்லாம்வீணாகுதடி
மின்னி ஒளிவிடும் மேனியளே—உந்தன்
மின்னலெலாம்வீணே போகுதடி
பின்னிப் படர்ந்ததோர் காட்டினுள்ளே—வாசப்
பிச்சி மலர்க்கொடி பூத்ததுபோல்
மன்னி உயர்மலை உச்சியிலே—கொண்டு
வைத்ததோர் தீஞ்சுவைத் தேனடைபோல்

கன்னிப் பருவத்துப் பெண்மயிலே

Koviloor Digital Library

பாலே வனத்திலே பால்பொழியும்—குளிர்
பௌர்ணமிச் சந்திரன் தானோநீ
வேலைத் திரைக்குளே முத்துக்கும்—ஒளி
விந்தை யழகுள்ள சிப்பியோநீ
நீலக் கடற்கசத் தாழத்திலே—சென்று
நிற்கும் பவளக் கொடிபோலே
மூலை இருளினில் மூடிமறைந்தே—ஓ! ஓ!
மோகினிப் பெண்ணேவீ ணாகுகிறாய்

கன்னிப் பருவத்துப் பெண்மயிலே

கண்மணி யேஇளங் காரிகையே—உந்தன்
கன்னிப் பருவம்வீண் போகுதேடி
பெண்மணி யேஎழிற் பெண்மயிலே—உந்தன்
பெண்மையெ லாம்த்சோ! வீ ணாகுதேடீ

!

Koviloor Digital Library

இன்பம்

கோடித் திரவியம்
　　கொட்டிக் குவித்தோன்
கோடிபல் கோடி
　　குவித்திட எண்ணியே
தேடித் தேடித்
　　தினமும் அலைந்து
கோடித் திரவியம்
　　கொண்டழித் தானே.

காதலன் நல்லிளங்
　　காளை மிடுக்கன்
காதலி கோதிலாக்
　　கட்டெழில் நாடுவான்
பூதலம் முற்றுமே
　　போயலைந் தோர்ந்தவன்
" சாதலே, கூறினன்
　　"சாலவும் நன்றுகாண் "

Koviloor Digital Library

ஓவியந் தேர்ந்தோன்
உயர்பெருங் கலைஞன்
ஓவிய லக்ஷியம்
உரைசெய எண்ணியே
காவியம் பேசிடும்
காட்சிகள் எங்கெனத்
தூரிகைக் கையன்
தொலைகள் தொலைந்தான்.

இன்பம் நாடி
ஏகிய மாந்தர்
இன்பந் தன்னை
எய்திடாக் கதையிது!

வானிலே நிலவுவீசி
வையத்தைச் சொக்குவிக்கும்
தேனிலே தோய்ந்துநின்ற
தேமதிக் கின்பம் யாங்ஙன்?

Koviloor Digital Library

கரியதோர் இரவுதன்னில்
கண்களைச் சிமிட்டி மோகம்
புரியுமோர் தாரகைக்குப்
பொங்கிடும் இன்பம் யாங்ஙன் ?

திரையெனும் கரங்கள் கொட்டித்
தேய்விலா தார்க்கு மந்தக்
கரையிலா இன்பந் தன்னைக்
கடல்கண்ட வகையும் என்னே ?

இன்பம் எங்கென
ஏகிடா வகையில்
இன்பம் வந்தே
எய்திய வாறிது !

Koviloor Digital Library

உன் உதவி

யவனர்தம் தேசத்தை இனிதாண்டான் அலெக்ஸாந்தர்
புவனம் முழுவதிலும் புகழ்பரந்து மிளிர்ந்திடவே.
ஒருநாள் பகல்நேரம் ஒருதனியே செல்லுங்கால்
ஒருமனிதன் வீதியொன்றின் ஓரத்துத் தொட்டியிலே
உடல்மட்டு முங்கவிட்டே ஒய்யார மாயிருந்தான்;
கடல்வேலி கொண்டுபுவி காத்திடும்அக் காவலனும்
அருகேகி நின்றுமிக அன்பாகக் கேட்டிடுவான்:—
'பரிவுடனே யான்செய்யும் பணியேதுமுளதோ சொல்'
'உலகத்தைப் புரப்பவனே உன்னுதவி ஒன்றுண்டு,
விலகியே நின்றிட்டால் வெயில்காய்வேன்'
என்றிட்டான்!



Koviloor Digital Library

காலதேவன்

மதியும் சூரியனும்—என்றஇரு
மாயப் பரிபூட்டி
விதியாம் தேரினிலே—காலதேவன்
விரைந்து செல்லுகிறுன்

யாரென்ன செய்தாலும்—அவனைநாம்
யாரென்ன வைதாலும்
தேரினைத் தானிறுத்தி—சற்றுமேதான்
திரும்பிப் பாரானே.

கோடி கோபுரங்கள்—தேரின்கீழ்
கோடி மாளிகைகள்
கோடி மகுடங்கள்—ஆயிரமாம்
கோடி ஆட்சிகளே!

காவியம் பல்கோடி—அற்புத
ஓவியம் பல்கோடி
பாவியான் தேரினிலே—பட்டவை
பற்பல கோடிகோடி!

Koviloor Digital Library

முருகன் பதம்

தனதன் னன தனதன் னன
    தனதன் னனத் தான
தனதன் னன தனதன் னன
    தனதன் னனத் தான—தானத்

தனதன் னன

முருகன் பத மலரை நினைந்
    துருகும் அவள் உள்ளம்
உருகும் அவள் உள்ளம் விழி
    பெருகும் பெரு வெள்ளம்—செந்தில்

முருகன் பதம்

மறுகும் அவள் உடலம் மனம்
    உருகும் முகம் வாடும்
அருகில் மயில் வருமோ என
    இருகண் களும் தேடும்—செந்தில்

முருகன் பதம்

Koviloor Digital Library

கத்தும் கடல் கரையிற் கொடு
முத்தம் பல சிதறும்
தத்தும் மன அலையில் விழி
முத்தம் பல உதிரும்—செந்தில்

முருகன் பதம்

செந்திற் பதி செல்லும் வழி
வந்தித் திடும் நாளும்
செந்தில் நகர் செல்வோர் பதம்
முந்திக் கொடு வீழும்—செந்தில்

முருகன் பதம்



Koviloor Digital Library



சித்தார்த்தன் துறவு

சூரியன் உச்சியிற் காயுவேளை—ஓர்நாள்
சுத்தோத னன்மனை முற்றத்திலே
யாரோ ஒருபிக்ஷு வந்துநின்றே—“ அம்மா
யாசகம் ” என்றுகை நீட்டினனே.

Koviloor Digital Library

முற்றத்து வாயிலில் யசோதரை—வந்து
மூடுங் கதவம் திறந்திடவும்
முற்றிய ஞானமா மூர்த்தியினைக்—கண்டு
மோனத் திகைப்பொடு நின்றுவிட்டாள்.

நெஞ்சிற் பெருகிடும் ஆசையினுள்—பண்டை
நினைவு திறந்திடும் உள்ளத்தினுள்
பஞ்சை மனத்தினில் மிஞ்சியெழும்—பெரும்
பாசத் தினாலவள் விம்மிவிட்டாள்.

"பாசம் களைந்திடு பற்றை யறுத்திடு
பந்தங்கள் இல்லையென் றோர்ந்திடம்மா
ஆசை இறந்திடில் அல்லலில்லை—பெண்ணே
ஆண்டு பலகண்ட உண்மையிது."

Koviloor Digital Library

இந்த மொழிஅண்ணல் சொன்னபோது—வீட்டில்
எங்கிருந் தோவந்த ராகுலனும்
"இந்தா பிடிபிச்சை" என்றுசொல்லி—வெகு
இங்கித மாய்க்கையில் ஈந்துநின்றான்!



Koviloor Digital Library

கவிதைப்பெண்

கவிதை எனுமோர் பெண்தெய்வம்—அவள்
கவிஞர் பரவும் அருந்தெய்வம்
புவியை இயக்கும் புகழ்த்தெய்வம்—அவள்
புலவர் தமக்குக் குலதெய்வம்.

கையில் வளைகள் ஆடிடுமே—அவள்
காலிற் சிலம்பு பாடிடுமே
மெய்யில் மின்னல் வீசிடுமே—அந்த
மேனி கவிதை பேசிடுமே

மண்ணை மிதித்துச் செல்கையிலே—பூமி
மங்கை யுள்ளம் மகிழ்ந்திடுமாம்
விண்ணைக் கிழித்துச் சாடையிலோ—வானம்
விம்மி நிமிர்ந்து விரிந்திடுமாம்

பூவில் நின்று சிரித்திடுவாள்—அவள்
பூங்கொடி தன்னில் ஆடிடுவாள்
காவில் வீசும் காற்றினிலே—இன்பக்
கண்ணிகள் பாடி உலவிடுவாள்

தாமரைப் பூவில் வீற்றிருப்பாள்—வானத்
தாரகை தன்னுள் மினுமினுப்பாள்
சாமமை யிருளிற் காட்டினிலே—ஒரு
சம்பகப் பூவிற் கமழ்ந்திடுவாள்.

Koviloor Digital Library

நீலமா மயிலின் தோகையிலே—எழில்
நெய்திடு பட்டுப் பூச்சியிலே
மாலையின் செவ்விய வானகத்தே—நின்று
மந்திரிப் பாளவள் அந்தரத்தே

ஆடிடு வாள்கடல் அலைகளிலே—எழுந்(து)
ஆர்த்திடு வாள்புயற் காற்றினிலே
ஓடிடு வாள்நதி ஓட்டத்திலே—அவள்
உதித்திடு வாள்கதிர் வட்டத்திலே

கவிதை எனுமோர் பெண்தெய்வம்—அவள்
கவிஞர்க் கெல்லாம் குலதெய்வம்
புவியை இயக்கும் புகழ்த்தெய்வம்—அவள்
புலவர்க் கெல்லாம் குலதெய்வம்.

